JL v21194:19(3m)m1,1s9
N42
69406

## புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

---

பிரசுரம்] 1942-ம் ௵ ஜூன் ௴ 20௳ [ந. 100

---

## ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலய அறிக்கையின் 100-வது சஞ்சிகைக்கு புதுக்கோட்டை ஸமஸ்தான அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அவர்கள் அனுப்பிய நற்செய்தி.

இந்நிலய அறிக்கையின் 100-வது சஞ்சிகைக்கு ஒரு நற்செய்தி அனுப்புவதை பெரிய கௌரவமென்றே நான் பாவிக்கிறேன்.

இந்த அறிக்கை இந்த நிலயத்தின் சொந்தப் பத்திரிகையாகும். இது இந்நிலயத்திற்கு காரியதரிசியாகயிருந்து தற்சமயம் சென்னை மாகாணத்தின் யுத்தப் பிரசார இலாகா டைரக்டராக வேலைபார்த்துவரும் காப்டன் G. T. B. ஹார்வி துரையால் துவக்கப்பட்டு, அவரது சாமர்த்தியத்தால் இச்சமஸ்தானத்திலும், வெளியிலும் இவ்வறிக்கை பிரபலமாயிற்று. இக்காரியத்தில் ராவ் ஸாஹிப் N. தியாகராஜ அய்யர் அவர்களும் திறமையுடனும், குறையாத ஊக்கத்துடனும் ஒத்துழைத்துவந்தார். மேலும் இந்நிலயத்தினுடைய இதர அங்கத்தினர்களும் அதிக உத்ஸாகத்துடன் ஒத்துழைத்து இந்த ஸ்தாபனத்தை அபிவிருத்தி செய்தார்கள். இப்பொழுது ஸமஸ்தானத்திலுள்ள முக்கியமான ஊர்களில் எல்லாம் இந்நிலயத்தின் கிளை ஸ்தாபனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. காப்டன் ஹார்வி துரை மதராஸ் சென்ற பிறகு ராவ் ஸாஹிப் தியாகராஜ அய்யரும் மற்ற அங்கத்தினர்களும் ஊக்கம் கொஞ்சமேனும் குறையாவண்ணம் நிலயத்தின் அலுவல்களை நடத்திவருகிறார்கள்.

இவ்வறிக்கை வாரப்பதிப்பாக இங்கிலீஷிலும் தமிழிலும் பிரசுரிக்கப்படுகிறது. மிகவும் முக்கியமான விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. **யுத்த சம்பந்தமான உண்மைச் செய்திகளையும், அபிப்பிராயங்களையும் பரவச் செய்கிறது. சரியான விவரங்களைக்கொடுத்து எதிரியின் பொய் பிரசாரத்தை மறுக்கிறது. பொதுஜனங்கள் கலவரமடையாமலும் செய்கிறது.**

இந்த அறிக்கையின் 100-வது சஞ்சிகையைப் பிரசுரித்ததற்காக இந் நிலயத்தின் காரியதரிசிகளையும், அங்கத்தினர்களையும், இவ்வேலையில் ஈடு பட்ட மற்றவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் இந்த அறிக்கையைப் படிப்பவர்களுக்கும், மற்ற பொதுமக்களுக்கும் பின்கண்ட வேண்டுகோளைச் செய்துகொள்ளுகிறேன். அதாவது யுத்த முயற்சிக்குத் தகுந்த உதவி செய்வதோடு பொய் வதந்தி களையும், ஐந்தாம்படை நடவடிக்கைகளையும் அடக்கவேண்டும். உணவுப் பயிர்களையும், காய்கறிகளையும் அதிகம் உற்பத்தி பண்ணவேண்டும். அவரவர்கள் சக்திக்கு இயன்றவாறு நேசதேசங்களின் வெற்றிக்காகப் பரி சிரமப்படவேண்டும்.'

---

# மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தி அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பிய நற்செய்தி.

---

(கிளாஸ்டர் கோமகனுல் புது டெல்லியிலிருந்து ஜூன்மீ 13உ ஒலிபரப்பப்பட்டது).

## கியாதிபெற்ற தேசம்.

"என் தம்பி இந்தியாவுக்கு வந்திருப்பது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது. இந்திய நாட்டிற்கு நான் இதுவரை வராதது எனது துரதிர்ஷ்டம் தான். மீண்டும் சமாதானம் வழங்கிய உடனேயே நான் இந்தியாவுக்கு விஜயம் செய்ய விரும்புகிறேன். நான் எனது தம்பி மூலமாக இந்திய மன்னர்களுக்கும், மக்களுக்கும் நற்செய்தியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"சமாதானம், ஸ்வதந்திரம் முதலியவைகளுக்கு வழிதேட நான் செய்ய விருந்த வேலைகளை இந்த நீண்ட கோர யுத்தம் தடுத்துவிட்டது. இந்த யுத்தத்தை நாமாக ஆரம்பிக்கவில்லை.

"நாம் தர்மமான காரணங்களுடன் சண்டை செய்கிறோம். பரம்பரையான விசுவாஸத்தை முன்னிட்டு இந்திய மன்னர்களும், பொதுமக்களும் இந்த யுத்தத்திற்காகப் பணம், மனிதர்கள், சரீரப் பிரயாசை முதலிய உதவிகளைச் செய்ததற்காக நான் பாராட்டுகிறேன்.

"பொதுஜன ஸம்ரக்ஷணையை வைஸிராயும், இதர உபதேசகர்களுமாக இருந்து தைரியமாக நடத்துகின்றனர். இவர்களுக்கு உதவியாக தொழிற்சாலை களும் தொழிலாளிகளும் இருந்துவருகின்றன.

"இருந்தாலும் இன்னும் எவ்வளவோ செய்யப்படவேண்டியிருக்கிறது. காலம் குறைவாக இருப்பதால் தாமதிக்கக்கூடாது. எதிரி நமது வாயிலுக்கு வந்து விட்டான். ஆனல் நல்லெண்ணமும் ஒத்துழைப்பதும் இருந்துவிட்டால் எவ்வித இடையூறுகளிலிருந்தும் சமாளித்துவிடலாம். ஆகவே இவ்விரண்டு வார்த்தைகளை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்".

## இந்தியப் படைகளுக்குப் பாராட்டு.

"இந்திய ராணுவத்தைப்பற்றி அதிகம் சொல்லப்பட வேண்டும். சக்ர வர்த்தி பேரில் அதிக விசுவாஸத்துடனேயே நடந்துகொண்டு வருகின்றனர். இந்தியச் சைனியம் பல அரங்கங்களில் திறமையுடன் சண்டைசெய்து புகழடைந் திருக்கின்றன. எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாவதை இவர்கள் லக்ஷியம் செய்யாது வீரம் குன்றுமல் சண்டை செய்திருக்கின்றனர்.

"இந்தியக் கப்பற்படையும், விமானப்படையும் பாராட்டக்கூடிய வண்ணமாக சண்டையிலீடுபட்டிருக்கின்றன.

"தேசப்பாதுகாப்புப் படையினரும் அவ்விதமே நடந்துகொள்ளுவார்கள் என்று நம்பியிருக்கிறேன். அவர்களும் ஆபத்தான சமயங்களில் மனம் கலங்காமல் நடந்துகொள்ளுவார்கள்.

"சக்ரவர்த்தி என்ற முறையில் நான் இந்திய மக்களுடன் சகோதரத் தன்மையுடன் ஒத்துழைப்பதை பெருமையாகவே நினைத்திருக்கிறேன். நீங்களும் இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டு ஒன்றுபட்டு நிற்கிறீர்கள்.

"உங்களுக்கு ஏற்பட்டுள்ளது அதிக சிரமம்தான். நாங்கள் போதுமான உதவியளித்தாலும் உங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துகளும் பலவாரானவைதான். அனைத்தையும் மிக்க தைரியத்துடனும், உறுதியுடனும நிர்வகிப்பீர்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது.

"பொதுவாக யாவருக்கும் ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தில் அவநம்பிக்கை குறைந்து, ஆழ்ந்த நல்லெண்ணம் பரவி, இந்தியாவிற்கு நற்கதி ஏற்பட வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

"தற்போது நாம் படும் பரிசிரமத்திற்கெல்லாம் ஆண்டவன் தகுந்த பயன்களை அளிப்பார். நமது முயற்சிகளால் எதிரி தொலைந்து இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் சமாதானம் வழங்கும்."

---

**பிரஸங்கம் C.**

# நேசநாடுகளின் தினம்:

## வெற்றியைப்பற்றிய நம்பிக்கையும் நிச்சயமும்.

**புதுக்கோட்டையில் ஜூன்மீ 14உ நேசநாடுகளின் கொடி விழாவை நடத்தியபோது புதுக்கோட்டை ஸமஸ்தான அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அவர்கள் செய்த சொற்பொழிவு.**

---

### மனிதப் பிரயத்தனத்தில் வெற்றி நம்முடையதுதான்.

உங்களில் யாராவது சிலர் யுத்தத்தைப்பற்றி மனம் தளர்ந்திருந்தால் அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக இன்றிரவு நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்று நேசநாடுகளின் தினம் கொண்டாடப்படுகிறது. ருஷ்யாவுடன் சமீபத்தில் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கும் காரணத்தினால் நேசதேசங்களுக்கு முன்பைவிட அதிக ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. முன்பைவிட வெற்றியும் அதிகம் ஊர்ஜிதமாக்கப்பட்டிருக்கிறது. நேசதேசங்களுக்கு முடிவான வெற்றி கிடைப்பது என்பதைப்பற்றி உங்களில் யாவருக்கும் சம்சயம் வேண்டாம். மனிதப் பிரயத்தனத்தில் நிச்சயம் கிடைக்கும்.

### அப்போதும், தற்போதும்.

தற்போதுள்ள பிரிடிஷ சாம்ராஜ்யத்தின் நிலையையும், முன்பு பிரான்ஸ் எதிரி வசமாகி நம்மைத் தனியே விட்டபோது ஜெர்மன் தாக்குதல் பூராவாக ஏற்படும்போல் காணப்பட்ட நிலையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அந்த சமயத்தில் யாவரும் பயந்தனர். ஆனால் அஞ்சா நெஞ்சம் படைத்த மிஸ்டர் சர்ச்சில் கொஞ்சமும் பயப்படவில்லை. மீண்டும் சண்டை செய்யவேண்டுமென்ற தீர்மானம் கொண்டார். தேசத்தை வெற்றிமார்க்கத்தில் நடத்திச் சென்றார்.

## தீர்க்க திருஷ்டிவேண்டும்.

யுத்தத்தின் போக்கால் இனி நமக்கு கஷ்ட நிலைகளும், தோல்விகளும் ஏற்பட்டாலும் ஏற்படும். எகிப்தை ஜெர்மானியர் எடுத்துக்கொண்டாலும், இது ஒரு நாளும் சம்பவியாது, ஜப்பானியர் இந்தியாவில் இறங்கினாலும், இது நேரவே நேராது, சண்டை அதோடு முடிந்துவிடாது. எதிரிகளும் முடிவான வெற்றியை அடைந்துவிட முடியாது. இதுவே எனது நம்பிக்கை. எப்போதும் தீர்க்காலோசனை செய்வதுதான் நலம். சிறு சண்டைகள் சாதகமாகவும் பாதகமாகவும் ஆவதைப்பற்றியோ, ஒரு கோட்டை, ஒரு கப்பல், இவைகளை இழப்பது, பிடிப்பதைப் பற்றியோ, இங்குமங்கும் முன்னேறுவது, பின்வாங்குவது முதலியதைப் பற்றியோ அதிகம் சிந்திக்கக்கூடாது. ஒரு தடவை ரேடியோ செய்திகளைக் கேட்டுவிட்டு இத்துடன் இந்த யுத்தமே முடிந்துவிட்டதாக சிலர் நினைக்கின்றனர். அது கூடாது. சண்டையில் ஈடுபடாத நாம் சண்டையைச் சாதகமாகவோ பாதகமாகவோ மாற்றிவிட முடியாது. ஆனால் நமது தைரியம் மாத்திரம் குறையக்கூடாது. பிறர் தைரியத்தையும் போக்கடிக்கக்கூடாது.

## ஜப்பான் தோற்கடிக்கப்படும்.

ஜப்பான் சம்பந்தப்பட்டவரையில் தனது சைனியங்களையும், கப்பற் படைகளையும், விமானப் படையையும் வெகுதூரம் கண்மூடித்தனமாக அனுப்பியிருக்கிறது. இவ்வளவு விஸ்தாரமான பிரதேசங்களில் தனது ராணுவங்களைப் பிரித்திருப்பதால் தோல்வியேற்பட்டால் அதனால் சமாளிக்கமுடியாது. நேசநாடுகள் விமான பலத்தையும், கடல் பலத்தையும் ஸ்தாபித்துவிட்டால் ஜப்பான் அடைந்த வெற்றிகளெல்லாம் குத்துப்பட்ட பலூனைப்போல சிதைந்துவிடும். இதற்குக் கொஞ்சகாலம் பிடிக்கலாம். ஆனால் அவ்விதம் நேருமென்று நிச்சயம் சொல்லலாம். ஜப்பான் சம்பந்தப்பட்டவரையில் அதற்குத் தோல்விகாலம் ஆரம்பித்திருக்கிறதென்றே தோன்றுகிறது. ஜோஸ்யம் சொல்லுவதை நான் அதிகம் விரும்புவதில்லை. ஏனென்றால் வேறு விதமாக நடந்தால் ஜோஸ்யம் பொய்யாகிவிடும். இருந்தாலும், ஜப்பானின் ஆக்கிரமண காலம் முடிந்துவிட்டதால் இனி அது பின்வாங்கும் காலம் வந்துவிட்டதென்று மாத்திரம் சொல்லலாம். பவளக்கடல், மிட்வே தீவுகளில் நடந்த சண்டைகளில் அதன் கப்பற்படையும் விமானப்படையும் அதிகமாகக் குறைந்துவிட்டன. சண்டைக் கப்பல்களும், போக்குவரத்துக் கப்பல்களும் போதுமானபடி அதன் வசத்திலில்லை. அமெரிக்காவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஜப்பானின் பலம் மிகக்குறைவானது. ஜப்பான் ஒரு வருஷத்தில் தயாரிக்கக் கூடிய விமானங்களை அமெரிக்கா ஒரு மாதத்தில் கட்டிமுடிக்கிறது. மேலும் சைனா யுத்தத்தில் ஐந்து வருஷகாலமாக அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறது. நாம் எதிர் பார்ப்பதற்கு முன்னாடியே ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டால் ஜப்பான் தானாக சமாதானம் செய்துகொள்ள வேண்டியதுதான். அல்லது ஜப்பான் முதலில் தோற்கடிக்கப்பட்டால முழு பலத்தையும் ஹிட்லருக்கு எதிராக நாம் உபயோகித்துக்கொள்ளலாம்.

## ஹிட்லரின் தோல்வியும் நிச்சயம்.

ஜெர்மானியருக்கும் ஜப்பானியரைப்போல் ஆரம்பத்தில் நல்ல வெற்றிகள் கிடைத்ததென்பது உண்மைதான். ஜெர்மானியர் சண்டைக்கென்று பல வருஷங்களாகத் தயார் செய்துகொண்டிருந்தனர். நாம் தயாராக இல்லை. இருந்தாலும், தற்சமயம் ஒன்று சேர்ந்திருக்கும் பிரிடிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, ருஷ்யா, சைனா இவைகளுடைய பலத்துடன் எவ்வாறு ஜெர்மனி எதிர்த்து நிற்கமுடியுமென்பதை சற்று யோசித்துப் பாருங்கள். ஐரோப்பாவில் இதுவரை நமக்கு கடல் ஆதிக்கம் மாத்திரம் இருந்தது. தற்சமயம் விமானாதிக்கமும் ஏற்பட்டிருக்கிறது. கிழக்கே இரண்டிலும் நமக்கு பலம் இல்லாமலிருந்ததால் ஜப்பானியர் தாத்காலிகமான வெற்றிகளையடைந்தனர். ஜெர்மன் தொழிற்சாலைகளை நாம் தாக்கி வருகிறோம். பெரிய நகரங்களும் தாக்கப்பட்டுவருகின்றன. இதைக்கண்டு ஆத்திரப்பட்டு, ஹிட்லர், பிரிடிஷ் புண்ய ஸ்தலங்களையும், கோடை வாசஸ்தலங்களையும் தாக்கிவருகிறான். சக்தியிருந்தால் நம்மைப்போல் அவனும் தாக்கட்டும்.

இனி அவனால் அவ்விதம் செய்யமுடியாது. ஏனென்றால் நமது விமானங்களும, கப்பல்களும், டாங்கிகளும், யுத்த தளவாடங்களும் அவனுடைய எண்ணிக்கையைக் காட்டிலும் மிக அதிகமாகிவிட்டன. மேலும் நமது விமானங்களும், விமானிகளும் அதிக சக்தியும் சாமர்த்தியமும் வாய்ந்திருக்கின்றன. போராக் குறைக்கு ருஷ்யாவில் சிக்கிக்கொண்டிருக்கிறான். அங்கே ஏராள நஷ்டமடைந்திருக்கிறான். பின்வாங்கி ஓடவும் முடியாது. அப்படி தோல்வி வந்ததாக ஒப்புக்கொண்டால் உள்நாட்டிலும் கலகம் ஏற்படும். இந்நிலைமையில் அமெரிக்கப் படைகளும், பிரிடிஷ் சைனியங்களுடன் சேர்ந்துகொண்டு மேற்குப் போர் முனையில் ஜெர்மனியை சீக்கிரம் தாக்கப்போகின்றன.

## இதாலி ஏற்கனவேயே தோற்கடிக்கப்பட்டது.

அவனுக்கு உதவியாக இருந்த இதாலி ஓரிடத்திலும் சண்டை செய்யவில்லை. மனித பலமும், மூலப்பொருள்களும் அதிகம் கிடையாது. இந்த சந்தர்ப்பங்களில் தனக்குத் தோல்வி வந்துவிட்டதாகவே ஹிட்லர் நினைத்திருக்கவேண்டும்.

## யுத்தத்தின் போக்கை கவனியுங்கள்.

ஆகவே இந்த யுத்தத்தின் முழு சம்பவங்களையும் பரிசீலனை செய்துபாருங்கள். யுத்தத்தின் போக்கையும் கவனியுங்கள். சிறு சம்பவங்களை மாத்திரம் குறுகிய மனப்பான்மையுடன் கவனியாதீர்கள். யுத்தரங்கத்தில் ஏற்படும் சாதக பாதகங்களை மாத்திரம் கவனிக்காதீர்கள். எப்போதும் யுத்தரங்கங்கள் அப்படித்தான் இருக்கும். அவைகளைக்கொண்டு முடிவை நிர்த்தாரணம் செய்ய முடியாது.

நான் இச்சொற்பொழிவை முடிக்குமுன் தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் காரியதரிசியான ராவ் ஸாஹேப் தியாகராஜ அய்யரைப் பற்றியும், தலைமை ஸ்தாபனத்திலும், கிளை ஸ்தாபனங்களிலும் அவருக்கு உதவியாக இருந்து மனப்பூர்வமாகத் தாங்களாக வேலைசெய்து வருகிறவர்களைப் பற்றியும் நான் சில பாராட்டு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். காப்டன் ஹார்வி வேறு உத்தியோகத்திற்குச் சென்றதும் அவருடைய தூண்டுதலும் உணர்ச்சியும் இல்லாது இந்நிலயம் எவ்வாறு நீடித்திருக்குமென்று நான் சந்தேகித்ததுண்டு. ஆனால் பிரகிருத நிலையைப் பார்த்ததும் நான் சந்தேகித்தது தவறென்று புலப்படுகிறது. அடுத்தபடியாக மிஸ்டர் N. சேதுராம அய்யருக்கும், தாலுகாக்களிலும், கிராமங்களிலும் அவருக்கு உதவியாக இருக்கிறவர்களுக்கும் எனது நன்றியைச் செலுத்துகிறேன். கூடிய சீக்கிரத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் இந்த நிலயத்தின் நடவடிக்கைகள் பரவுமென்று நம்புகிறேன். நேற்று காலை அன்னவாசல் கிளை ஸ்தாபனத்திற்குச் சென்று அங்கிருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்து திருப்திகொண்டேன். மற்ற கிளை ஸ்தாபனங்களையும் போய்ப் பார்வையிடுகிறேன். முடிவில் நமது ஏ. ஆர். பி. ஸ்தாபனம் செய்துவரும் நல்ல வேலையைப்பற்றி பகிரங்கமாக எனது திருப்தியைத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். இந்த ஸ்தாபனத்திற்கு போலீஸ் சூபரின்டென்டெண்டு, மிஸ்டர் கோசலராம நாயுடு, ஏ. ஆர். பி. ஆபீஸர் தலைமை வகிக்கின்றனர். இவர்களுக்கு உதிவியாக போலீஸ் உத்தியோகஸ்தர்களும், பல வார்டன்களும், மற்றும் சிலரும் இருந்து வருகின்றனர். இவர்கள் பொதுஜனங்களை ஒழுங்கான திட்டத்திற்கு உட்படுத்தியிருப்பது இருதரப்பினருக்கும் கௌரவத்தையளிக்கிறது.

## லக்ஷியத்தையே கவனியுங்கள்.

நான் முடிவில் திரும்பச் சொல்லுவதென்னவென்றால், தைரியத்தை இழக்காதீர்கள். மனம் தளராதீர்கள். லக்ஷியத்தையே நோக்கமாகக் கொள்ளுங்கள்!

# நேச நாடுகள்—கொடி விழா.

## நற்செய்திகளும் பிரார்த்தனைகளும்.

## (I)
## அமெரிக்க ஜனாதிபதியின் வேண்டுகோள்.

"அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஜனாதிபதியான, நான், கொடிவிழா தினமான 1942-ம் வருஷம் ஜூன் 14௳ கிரேட் பிரிடன், வட ஐயர்லாந்து, ருஷ்யா, சைனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா கோஸ்டாரீகா, கூபா, ஜெக்கோஸ்லாவாகியா, டாமினிகன் குடியரசு, எல் ஸால்வடார், கிரீஸ், காடிமாலா, ஹெய்டி, ஹாண்டுராஸ், இந்தியா, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, நியூஸீலாந்து, நிகராகுவா, நார்வே, பனாமா, போலந்து, தென ஆபிரிக்கா, யூகோஸலாவியா, முதலிய நாடுகளின் மக்களை, இந்நாடுகள் யாவும் ஒன்றுமைப்பட்டிருந்தால் தான் மனித வர்க்கமே ஸ்வதந்திரத்தையும் சமாதானத்தையும் அடைய முடியுமென்ற எண்ணத்துடன் கௌரவிக்கவேண்டுமென்று நான் இதன் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன்."

## (II)
## மிஸ்ட்டர் சர்ச்சிலின் நற்செய்தி.

"அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களுக்கு விடுவித்த சாசனத்தில் நமது சிநேகிதரான ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பல வருஷங்களாக அமெரிக்காவின் கொடியின் ஞாபகார்த்தமாக ஜூன்௴ 14௳ குறிப்பிடப்பட்டிருப்பதாக நினைப்பு மூட்டினார். அந்தக் கொடி அவர்களின் ஸ்வதந்திரம், பலம், ஒற்றுமை, முதலியவைகளின் அடையாளமாக இருந்து பூலோகத்தில் ஸ்வதந்திரம் பெற்ற நாடு என்பதைத் தெரிவிக்கிறது.

"அமெரிக்கர்கள் தனியாகச் சண்டை செய்யவில்லையென்றும் இதர நேச நாடுகளும் தோளோடுதோள் கொடுத்து சண்டை செய்வதாயும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அறிவிக்கிறார். உலகத்திலுள்ள ஜனங்கள் யாவரும் ஒன்று சேர்ந்திருப்பதாகவே அவர் நினைக்கிறார். ஜூன௴ 14௳, தங்கள் நாட்டிற்கு அடையாளமான கொடியைக் கொண்டாடுவது போல இதர நேசநாடுகளின் கொடிகளையும் வைத்துக் கொண்டு நேசநாடுகளின் கொடி விழாவைக் கொண்டாடவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

"பிரிட்டனைப்போல் தவிர மற்றும் கௌரவம் வாய்ந்த இதர நாடுகளும்இருக்கின்றன. அமெரிக்கா, ருஷ்யா, சைனா ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, கோஸ்டாரீகா, கூபா, ஜெக்கோஸ்லாவாகியா, டாமினிகன் நாடுகள், எல்ஸால்வடார், ஸ்வதந்திர பிரான்ஸ, கிரீஸ், காடிமாலா, ஹெய்டி, ஹான்டுராஸ், இந்தியா, லக்ஸம்பர்க், மெக்ஸிகோ ஹாலந்து, நியூஸீலாந்து, நிகராகுவா, நார்வே, பனாமா, போலந்து, தென் ஆபிரிக்கா, யூகோஸ்லாவியா முதலியன.

"இவ்வித நாடுகளை கௌரவிப்பதில் ஜனாதிபதியுடன் நானும் சேர்ந்துகொள்ளுகிறேன். ஏற்கனவே போரில் இறந்தவர்களுக்கு நமது நன்றியைச் செலுத்துவோம். தற்சமயம் சண்டை செய்வோருக்குத் தைரியத்தை ஊட்டுவோம். கொடுங்கோலுக்கு உட்பட்டிருக்கும் நாடுகளில் ஸ்வதந்திரத்தை அடைவதற்காகப் பாடுபடும் ஒவ்வொரு ஸ்திரீயையும், புருஷனையும், குழந்தையையும் சதா நினைப்போம்.

"இந்த விழாவின் போது வெற்றி கிட்டும் வரை நாம் ஒத்துழைக்க சம்மதித்திருப்பதோடு, அகண்ட நோக்கம், தயவு, மனிதனுக்குப் பொதுவான நோக்கம் முதலியவைகளை ஸ்தாபிக்கவும் முயலுவோம். அப்படியிருந்தால் நேசநாடுகள் நிச்சயம் வெற்றிபெறும்."

(III)

## ஜனாதிபதி ரூஸ்வெல்டின் நற்செய்தி.

"நமது கொடி தினமான இன்றைய தினத்தை நேசநாடுகள் தினமாகவும் கொண்டாடுகிறோம். நமது எதிரிகளை முறியடித்து, மனிதனின் ஸ்வதந்திரத்தை ஆதாரமாகக்கொண்ட உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தவே நேசநாடுகளுக்குள் இந்த ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது.

"இன்று மெக்ஸிகோ குடியரசும், பிலிப்பைன்ஸ் தீவுகளும் நம்முடன் சேர்ந்திருக்கின்றன. ஸ்வதந்திரத்திற்காகப் போர்புரியும் நாம் இவர்களையும் வரவேற்கிறோம்.

"பொதுவாக மனித வர்க்கத்திற்குரிய நான்கு ஸ்வதந்திரங்களும், காற்று, சூரிய ஒளி, உணவு உப்பு முதலியவைகளைப்போல் அவ்வளவு அத்தியாவசியமானவை. இவைகள் அனைத்தையும் பிடுங்கிவிட்டால் மனிதன் இறக்கவேண்டியதுதான். அவைகளில் ஓரளவைப் பறித்தாலும் அந்த அளவிற்கு மனிதன் வாடவேண்டியதுதான். அந்த ஸ்வதந்திரங்களை மனிதர்கள் ஏராளமாக அடைவாராயின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகும். அதுவே மனித சமூகம் பார்த்ததிற்குள் மகத்தானதாகும்."

"இந்த ஸ்வதந்திரங்கள், மனிதர்கள் எந்த இடத்தில் வசித்தாலும், எந்த ஜாதியைச் சேர்ந்திருந்தாலும், எந்தப் பிரிவை அடைந்திருந்தாலும் அனைவருக்கும் உரியவைகளாகும். இவைகளை நெடுநாட்களுக்கு முன்பே அடைந்திருக்கவேண்டும். ஏதோ தடைபட்டிருந்திருக்கிறது. நேசநாடுகளான நமக்குப் போதுமான சக்தியும் மனித பலமும் இருப்பதால் மனிதர்களுக்கு அந்த ஸ்வதந்திரங்கள் கிடைக்குமாறு செய்வோம்.

"மனித வர்க்கத்தின் நான்கு ஸ்வதந்திரங்களிலும், கடவுள் உருவத்தில் மனிதன் ஸ்வதந்திரத்துடன் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதிலும் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். ஆனால் நமது சத்ருக்கள் அவ்விதம் நினைக்கவில்லை. இதுவே நமக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசம். நாம் கொண்டுள்ள நம்பிக்கையினாலேயே நாம் ஒற்றுமைப்பட்டிருக்கிறோம்.

"இதுவே நமக்குள்ள பலத்திற்கும், வெற்றியைப்பற்றிய நிச்சயத்திற்கும் காரணம். நமக்கு ஏற்பட்டுள்ள இந்த நம்பிக்கையை எந்த மனிதனும் எந்த சக்தியும் குலைக்க முடியாதென்பதை நாம் அறிவோம் அடிமைத்தனத்தில் அகப்பட்டுக்கொண்டு மௌனமாக இருக்கும கோடிக்கணக்கான பேர்களும் இதே நம்பிக்கை கொண்டிருக்கின்றனர் என்பதும் நமக்குத் தெரியும்.

### அச்சு நாட்டு மக்களுக்கு சில கேள்விகள்.

இன்று நாஸித் தலைவர்களுக்கு அடங்கிக் கிடக்கும் ஜெர்மன் மக்களைப் பின்கண்ட கேள்வியைக் கேட்போம். அதாவது ஹிட்லரின் புதிய திட்டத்தின் பயனாக ஏற்படக்கூடிய நரக வேதனை தேவலையா, அல்லது அதற்குப் பதிலாகப் பேச்சு உரிமை, மத ஸ்வதந்திரம், பஞ்சம், பயமில்லாத வாழ்க்கை இது தேவலையா என்று.

"அதுபோல, யுத்த வெறிகொண்ட தலைவர்களின் காலடியில் மிதிபட்டுக் கிடக்கும் ஜப்பானிய மக்களையும் ஒரு கேள்வி கேட்போம். அடிமை, யுத்தம் இந்த சந்தர்ப்பங்களில் இன்னும் அவர்கள் வசிக்க விரும்புகின்றனரா அல்லது, பேச்சு உரிமை, மத ஸ்வதந்திரம், பஞ்சம் பயமில்லாத வாழ்க்கை இதை விரும்புகின்றனரா என்று.

"இதே மாதிரி அச்சுநாடுகளின் கொள்ளை, அவமானம் முதலியவைகளுக்கு உள்ளான நாடுகளிலுள்ளவர்களையும் இம்மாதிரி கேட்போம். இதற்கு பதிலை நாம் அறிவோம். அவர்களும் அறிவார்கள்.

"கடவுள் ஸ்வரூபத்தில் ஸ்வதந்திரமாக வாழவே பிறந்த மனிதர் எப்போதும் கொடியவர்களின் கொடுங்கோல் ஆட்சிக்கு உட்பட்டிருக்கமாட்டார்கள். நேச தேசங்களிலுள்ள மக்கள் அப்பேர்ப்பட்டவர்களின் ஆட்சியைப் பிடுங்கி அக் கொடியவர்களை அடக்குவார்கள். கடும் கொடுங்கோல் ஆட்சிகள் எத்தனையோ இவ்விதமாகக் குலைந்து போயின. ஆனால் மனிதன் மேலும் மேலும் முன்னேற்ற மடைந்துதான் வருகிறான்.

## பிரார்த்தனை.

"நேசதேசங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பிரார்த்தனையை வாசித்து எனது சொற்பொழிவை முடிக்கப் போகிறேன். அதாவது :—

"ஸ்வதந்திர மக்களைக் காக்கும் கடவுளே! மனித வர்க்கத்தின் ஸ்வதந்திரத்திற்காக எங்கள் உயிரையும் மனதையும் அர்ப்பணம் செய்கிறோம். எல்லா நாடுகளையும் அடிமைப்படுத்த நினைத்திருக்கும் கொடுங்கோல் மன்னர்களுடன் புரியப்படும் இந்த யுத்தத்தில் எங்களுக்கு வெற்றி அருள்க. ஸ்வதந்திரத்திற்காகப் போராடும் யாவருக்கும் சகோதரர்கள் என்ற மனோபாவம் ஏற்படும் படியான நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் கொடுத்தருள்க. இந்த யுத்த காலம் மட்டுமின்றி, பிற்காலத்திலும் அவ்வித சகோதரபாவம் ஏற்பட வேண்டுமென்று அனுக்கிரகம் செய்யவும். அந்த சமயத்தில் உலகவாசிகள் யாவரும் நிச்சயம் ஒன்று சேருவார்கள்.

"பெரிய பிரபஞ்சத்தில் இந்த பூமி ஒரு சிறிய நட்சத்திரம்தான். எனினும் நாம் இஷ்டப்பட்டால் இதில் யுத்த மேற்படாமலும், பசி, பயம் முதலிய தொந்தரவில்லாமலும், ஜாதி, மதம், நிறம் முதலியவைகளால் வேற்றுமை ஏற்படாமலும் செய்துகொள்ளலாம்.

"அவ்வேலையை இன்றுமுதல் ஆரம்பிக்க தைரியத்தையும், தீர்க்க திருஷ்டியையும் எங்களுக்கு அளித்து மனிதன் முன்னேற்றத்துடன் கூடியிருக்கிறான் என்று எங்கள் சந்ததியார் கௌரவமாக நினைக்கும்படி செய்யவும்.

"தனது குறுகிய வாழ்நாட்களுக்குள் தனது லக்ஷியத்தை சாதிப்பதற்காகக் கஷ்டங்களை அனுபவிக்கும் மனிதனின் பெருமையைத் தெரிந்து கொள்ளக்கூடிய அறிவைக் கொடுத்தருளும்.

"இவ்விதமான நம்பிக்கையுடன் இறந்துபோன மூதோர்களுக்காக எங்களை கௌரவிக்கவும், அடிமைக்குள்ளாகிய நாடுகளையும், மக்களையும் மீட்டுவதற்காகவும், அவர்களுக்கு க்ஷேமத்தை அளிப்பதற்காகவும் பாடுபடுவோரையும் கௌரவிக்கவேண்டும். தனியே எதிரி நாட்டில் அடைபட்டிருப்போர் விஷயத்தில் பொறுமையையும், துரோகிகளின் பேரில் தயவையும் காட்ட எங்களுக்கு அனுக்கிரஹம்செய்க. கேவலம் சரீர பலத்தினால் மாத்திரம் யாவரையும் அடக்கிவிடலாம் என்ற மூட நம்பிக்கையைக் கொண்டு உலகை ஆக்கிரமித்து வருவோரை ஒழிப்பதற்கான தந்திரத்தையும், தைரியத்தையும் எங்களுக்குக் கொடுத்தருள்க.

## சகோதரத் தன்மையைக் கொடுத்தருள்க.

"வார்த்தையில்மட்டுமல்லாது, செய்கையிலும் சகோதரத் தன்மை வெகுநாள் இருக்குமாறு அருள்க. நாங்கள் யாவரும் பூதேவியின் புதல்வர்களென்ற இந்த சிற்றறிவைக் கொடுத்தருள்க. எங்களுடைய சகோதரர்கள் அவஸ்தைப் பட்டாலும், பட்டினி கிடந்தாலும், அவர்களுடைய ஸ்வதந்திரம் பிடுங்கப்பட்டாலும் அவ்வித அவஸ்தைகள் எங்களுக்கும் உண்டானமாதிரிதான்.

"மனிதன் ஸ்வதந்திரத்துடனும், சமாதானமாகவும் வாழ்வான் என்ற நம்பிக்கையைக் கொடுக்கவும், நியாயம், தர்மம், ஸ்வதந்திரம், பத்திரம், முடிந்தவரை உலகம் பூரா யாவருக்கும் உதவும் சந்தர்ப்பம், முதலியவைகளை மனிதன் நினைக்கும்படிக்கும் செய்யவேண்டும். இவ்வித நம்பிக்கையுடன் நம்மால் சீர்திருத்தப்பட்ட உலகில் நாம் வாழ்வோமாக."

# வார யுத்தச் செய்திகள்.

13—6—42-லிருந்து 19—6—42-வரை.

**லிபியா.**—பிர்ஹாகிம், நைட்ஸ்பிரிட்ஜ், கஸாலா, எல் ஏடம், ஸிடிரெஸெக் இந்த இடங்களிலிருந்து நேசதேசப் படைகள் பின்வாங்கியுள்ளன. டொப்ரூக்கிற்குக் கிழக்கே கடற்கரையையும் எதிரி அடைந்துள்ளான்.

சண்டையில் வெற்றியடைவதென்பது ஸப்ளைகளைப் பொருத்திருக்கிறது. ரோமலுக்கு இச்சப்ளை குறைந்துவிட்டது. நேசதேசங்களுக்கு மேலும் உதவி வந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில் கிடைத்த செய்தியிலிருந்து டொப்ரூக்கிற்கும், மால்டாவிற்கும் பெரும் ஸப்ளைகள் வந்துவிட்டதாகத் தெரிகிறது. அவைகளை மத்தியதரைக்கடலில் எதிரிகள் கடல் விமானம் மூலம் தாக்கினார்கள். ஆனால் டாரண்டோ வகுப்பைச் சேர்ந்த 10,000 டன் இதாலிய க்ரூயிஸரும், மற்றும் இரண்டு நாசகாரிகளும் சேர்ந்து விரட்டப்பட்டன.

டாரண்டோ, பிரகூஸ், பெங்காஸி, பெர்கா, கஸ்டாலி, ஹெராக்ளியான், டிம்பாகி (கிரீட்) முதலிய அச்சுநாட்டு ஸப்ளைத் தளங்களை பிரிட்டிஷ் விமானப் படை நொருக்கிவிட்டது.

**ருஷ்யா.**—காகஸஸ்ஸில் டமன் தீபகற்பத்திலிருந்து ஜெர்மானியர் பின்வாங்கி விட்டனர்.

தீவிரமாகச் சண்டை செய்தும் ஜெர்மானியர், மே மாதத்தில் டிமோஷென்கோ பிடித்த நிலைகளைப் பிடித்தபாடில்லை. ஆகவே இரண்டாவது கார்கவ் சண்டையும் கலைந்துவிட்டது. ஆனால், கார்கவ் தங்களுடைய லக்ஷியம் இல்லையென்றும், கார்கவ் சண்டை முடிந்துவிட்டதென்றும் ஜெர்மன் தலைவர்கள் ஏமாற்றுகின்றனர்.

ஸெபாஸ்டபூலில் கடும் சண்டை நேர்ந்தாலும் ஜெர்மானியர் முன்னேறினபாடில்லை. ருஷ்யக் கருங்கடல் படை மீண்டும் ருஷ்யர்களின் உதவிக்கு வந்திருக்கிறது.

யால்டா, மரியோபோல் இரண்டிலும் ருஷ்யர்கள் இறங்க முயற்சித்ததை ஜெர்மன் ரேடியோ ஒப்புக்கொள்ளுகிறது.

நான்கு அமெரிக்க டக்ளஸ் பாம்பர் விமானங்கள் ஒடெஸ்ஸா, நிகலாயவ், ருமேனியக் கடற்கரை இப்பிரதேசங்களைத் தாக்கின. திரும்பி வரும்போது ஜெர்மன் பைடர்களால் துருக்கிக்கு அருகில் பின்தொடரப்பட்டன. ஆகவே துருக்கியில் இறங்க நேர்ந்தது. அதில் ஒரு விமானம் சேதப்பட்டது. மற்ற மூன்றும் பழுதாகவில்லை. அதில் இறங்கிய விமானிகளைக் கேட்டபோது 'கருங்கடல் தாக்குதலுக்காக' வந்ததாக அறிவித்தனர். எகிப்திலிருந்து இவர்கள் தாக்கச் சென்றதாகத் தெரிகிறது.

**சைனா.**—இரண்டுவாரக் கடுமை சண்டைக்குப் பிறகு விமான தளமான சுஹ்ஸீன் காலிசெய்யப்பட்டது. நான்செங், குவாங்பென், யூஷான் இடங்களை ஜப்பானியர் பிடித்துக்கொண்டனர். செகியாங்-கியாங்ஸி இருப்புப் பாதையை வசப்படுத்த கடும்போர் நடக்கிறது. ஹூபே முனையில் ஜப்பானியத் துருப்புகள் முன்னேறியிருக்கின்றன. ஷென்ஹானில் லின்ஹ்ஸீனையும் புகுந்தனர். மஞ்சூரியாவில் ஜப்பானியத் துருப்புகள் மிகுதியாயிருப்பதாயும், ஸைபீரியாவிற்கு ஏற்படக்கூடிய பயத்தைப்பற்றி சீன மந்திரிசபை பரிசீலனை செய்யப்போவதாயும் தெரியவருகிறது.

ஹாங்விங், பென்சாங், ஸின்சான்ஜின் இம்மூன்றிலும் சீனர்கள் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

நான்சாங்கின் தென்மேற்கே குறுக்கு எதிப்புசெய்து ஜப்பானியரை விரட்டி யடித்து அங்கரை முற்றுகையிடுகின்றனர்.

சிகியாங்-கியாங்ஸி சண்டையைப்பற்றி டா கூஜு பாவோ என்ற சீனப் பத்திரிகை எழுதும்போது சீனக் கடற்கரையோரமாயுள்ள விமான தளங்களை ஜப்பான் பிடிப்பது அதற்குத்தான் ஆபத்து. உள்நாட்டிற்குள் போகும்போது அதன் போக்குவரத்துகள் தாக்கப்படுகின்றன. கேந்தரமான ஸ்தானங்களைச் சீனர்கள் பிடித்தனர். இனி ஜப்பானியருக்குக் கஷ்டம்தான்.

**பஸிபிக்.**—மிட்வே சண்டையில் ஜப்பானியரின் 4 விமானம் தாங்கிய கப்பல்களும், 3 பெரிய க்ரூயிஸர்கள், ஒரு சிறிய க்ரூயிஸர், 2 நாசகாரிகள் உள்பட 15 சண்டைக் கப்பல்களும் நஷ்டம்.

அலூஷியன் தீவுகளின் ஓரமாயுள்ள அட்டு தீவிலும், கிஸ்கா துறைமுகத்திலும் இறங்கியிருக்கின்றனர்.

7 வாரங்களுக்குப் பிறகு டார்வினில் மறுபடி ஜப்பானியத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ரெபால், நியூ அயர்லாந்து, ஸிம்பர் தீவு, லாக், டிமோர் முதலிய இடங்களில் நேசதேசத் தாக்குதல் ஏற்பட்டிருக்கிறது.

**பலவகைப்பட்டவை.**—1 மேமீ 21வ ஆங்கிலேய-ருஷ்ய ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. யுத்த காலத்திலும், பிறகு 20 வருஷ காலம் வரையிலும் பரஸ்பரம் ஒற்றுமை ஏற்படுத்தப்படும். உலக சீர்திருத்தமும் அட்லாண்டிக் சாஸனத்தின்படி செய்யப்படும். 1942-ம்வூத்தில் இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதற்கான பிரச்னை சர்ச்சை செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வொப்பந்தத்தைக் கையெழுத்துச்செய்த மாலடோவ் மேமீ 2வ லண்டனுக்கும், மேமீ 29வ வாஷிங்டனுக்கும் போய் சில நாட்கள் தங்கியிருந்து இவ்விஷயங்களைச் சர்ச்சை செய்தார்.

அமெரிக்க-ருஷ்ய ஒப்பந்தமும் கையெழுத்தாகி ருஷ்யாவிற்கு டாங்கிகளும், விமானங்களும் துரிதமாக அனுப்ப ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. ஹிட்ரிச்சைக் கொலை செய்ததற்காக (Lidica) லிடிகா என்ற ஸெக் கிராமம் ஒன்று அழிக்கப்பட்டுள்ளது. 300 முதல் 400 வரை ஸ்திரீ புருஷர்கள் சொல்லப்பட்டும், ஜெயிலிலும் அடைக்கப்பட்டனர்.

ஸெக்கோஸ்லாவாகியா அயல்நாட்டு மந்திரியான மிஸ்ட்டர் மெஸரிக் அறிவித்தபோது இதற்கு 10 மடங்காக பழிவாங்கப்படுமெனறுர். ஸெக் ஜனாதிபதி டாக்டர் பீன்ஸ் 'ஹிட்லரையும், அவனது உத்தியோகஸ்தர்களையும்தான் நாங்கள் இக்கொடிய செய்கைக்கு மூலகாரணமாக நினைத்திருக்கிறோம்' என்றார்.

அமெரிக்கத் தலைவர்களும் இச்செய்கையை நிந்தித்துப் பேசியுள்ளனர். 'சரித்திரத்திலேயே இது மிகக்கொடிய செய்கையாகும்' என்று கார்டல் ஹல்லும், எதற்காக நீங்கள் சண்டை செய்தீர்கள் என்று யாராவது கேட்டால் லிடகா சம்பவத்தைச் சொல்லுவோம்' என்று நாக்ஸூம் சொல்லியிருக்கிறார்கள்.

3. அச்சுநாட்டுப் படைகள் கிரீஸில் 18 படைப்பகுதிகளை வைத்துக்கொண்டு ரகசியசூழ்ச்சிக்காரர்கள் 300 பேர்களை ரகசிய சூழ்ச்சிகளை நிறுத்தாவிட்டால் கொன்று விடுவதாயும் பயமுறுத்துகிறார்கள்.

4. 60,000 யூதர்கள் இதுவரை வில்னுவில் யந்திர பீரங்கியால் கொல்லப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

5. ஸ்லோவேனியாவில் குட் பிரைடே பண்டிகை தினத்தில் 250 கைதிகள் 10 தினங்களுக்குள் கொலை செய்யப்பட்டனர்.

6. லுஜூபெல்ஜானுவில் ரகசிய சூழ்ச்சிக்காரர்களைக் கொலை செய்யும்போது 38 கிராமங்கள் எரிக்கப்பட்டன.

7. பிரான்ஸில் தொழிலாளிகள் சேகரம் செய்யப்படுகிறார்கள். அடிமைகளேற்றிய ரயில்வண்டிகள் ஜெர்மனிக்குப் போய்க்கொண்டே இருக்கின்றன. ஏராள தொழிற்சாலைகளை லவால் மூடிவிட்டதால் ஆயிரக் கணக்கான பேர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர். அவர்களை ஜெர்மானியர் அழைத்துச் செல்லுகின்றனர்.

8. புதன்கிழமை காமன்ஸ் சபையில் யுத்தத்திற்காக 1,00,00,00,000 பவுன் ஒதுக்கப்பட்டது. ஆக யுத்த மொத்தச் செலவு 8,60,00,00,000 பவுன் ஒதுக்கப் பட்டுள்ளது 10,05,00,00,000 பவுன். தினசரிச் செலவு 1,20,00,000 பவுன்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப்படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **8—6—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள், தொழிற்சாலை, இருப்புப்பாதை—புரூஜெஸ் (Bruges). | | | |
| | பெரிய விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாயில் (English Channel), விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | | 6 விமானங்கள். | |
| | இரவில்.—கப்பல் துறைகள்—டியப் (Dieppe). | | | |
| | விரோதி விமான தளங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | | |
| | ரயில்வே லக்ஷியங்கள்.—வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | 18 விமானங்கள். | |
| | விரோதிக்குச் சொந்தமான கடல் விமானம்.—வட கடல் (North Sea). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | போக்குவரத்து மோட்டார்கள், பீரங்கி, ஸ்தானங்கள்—பீர்ஹாகிம் (Bir hakheim) பிரதேசத்தில. | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 5 விமானங்கள்; இன்னும் அநேகம் சேதமாயின. |
| | விமான நிலயம்.—பார்ஸ் (Barce). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **8—6—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ஹெராகிளியான் (Heraklion). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன | 9 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோட்டார் வண்டிகள், கட்டடங்கள்.— எர்மீரா (Ermera). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. | | |
| **9—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி சமுத்திரங்களில் சுரங்க வெடிகள் போடுவது. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கவசம் பூண்ட வண்டிகள், விரோதி ஸ்தானங்கள், மோட்டார்கள்.—பிர்ஹாகீம் (Birhakheim) பிரதேசத்தில். | | | |
| | விமானச் சண்டைகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | 6 விமானங்கள். |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயங்கள், இன்னும் பல ராணுவ லக்ஷியங்கள்.—லே (Lae), ஸலாமுவா (Salamaua). | | 2 விமானங்கள். | 13 விமானங்கள். |
| **10—6—42.** (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி விமான தளம்—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries). | | | |
| | ஒரு ரயில்வே ஸ்டேஷன், மின்சார உற்பத்திசாலை.—வடபிரான்ஸ் (France). | | | |
| | சுரங்க வெடிகள் போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரனைகாவின் (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்களில். | | | |
| | விரோதிப் படைகளின் போக்குவரத்து, மோட்டார்கள், பீரங்கி ஸ்தானங்கள்.—ஏராளமான சாமான் ஏற்றிச் செல்லும் வண்டிகள்— பீர்ஹாகீம் (Birhakheim) பிரதேசத்தில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **10—6—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயங்கள்.**—கிரீட் (Crete). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானஙகளால்). | | | |
| | **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.**—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி நீர்மூழ்கி.—கடற்கரைக்கருகாமையில். | மூழ்கடிக்கப்பட்டது. | | |
| | **நியூ பிரிடன் (New Britain)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.**—ராபால் (Rabaul). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **9—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia) வின் கடற்கரையில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும கிடைக்கவில்லை. | | | |
| **10—6—42.** (புதன்கிழமை). | | | | |
| | இங்கிலீஷ் கால்வாய் (English Channel).—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | இரவில்.—இங்கிலாந்தின் (England) தெற்குக் கடற்கரை. | கப்பல் ஒன்றும் சேதமாகவில்லை. | 3 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 6 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிர்ஹாகீம் (Birhakheim). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை | | | |

# யுத்தக் குறிப்புகள்.

**இந்நிலய சம்பந்தமானது.** இந்த அறிக்கையின் 100-வது சஞ்சிகை இப்போது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. 1940-ம் ஆடு ஜூலைமீ முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது முதல் இடையில் வந்த மூன்று கிருஸ்துமஸ் வாரங்களைத் தவிர, மற்ற எல்லா வாரங்களிலும் இவ்வறிக்கை வெளி வந்திருக்கிறது. இந்த சஞ்சிகையின் முதல் பக்கத்தில் நமது அட்மினிஸ்ட்ரேட்டர் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம் துரையவர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் அனுப்பிய நற்செய்தி அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த 100-வது சஞ்சிகையைப் பிரசுரிக்கும் சந்தர்ப்பத்தில் தனது பாராட்டுதலையும், பிரியத்தையும் தெரியப்படுத்தவே அவர் அவ்விதம் செய்திருக்கிறார்.

இவ்விதமாக நமது அறிக்கையும் 100 சஞ்சிகைகளைப் பிரசுரித்திருக்கின்றன. கிரிக்கெட் ஆட்டத்தில் இரு கக்ஷிகள் விளையாடுவது போல் நேசநாடுகளான நமக்கும் அச்சுநாடுகளுக்கும் நடந்துவரும் சண்டையில் நாம் வெற்றி பெற்றிருப்பதாகவே எண்ணலாம். அதாவது கிரிக்கெட் ஆட்டத்தில் 100 ஓட்டம் எடுத்ததற்கு சமமாகும். இந்த யுத்தமாகிற கிரிக்கெட் ஆட்டத்தில் நமது எதிரி ஒழுங்கான முறைகளையும் சட்டதிட்டங்களையும் கவனிக்கவில்லை. உதாரணமாகப் பிரசாரம் சம்பந்தப்பட்ட வரையில் பொய்யான சமாசாரங்களை வெளியிடுவது தான் எதிரியின் வழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் நாம் பிரசுரிப்பதெல்லாம் உண்மை விவரங்களே. இவ்விதம் மீண்டும் நடத்தி வெற்றி பெறுவோம்.

வி வி வி வி வி வி வி

**நமது லக்ஷியம்.** இந்த சந்தர்ப்பத்தில் நமது லக்ஷியங்கள் எவை என்பதைப்பற்றி சற்று விவரிப்போம். உலகத்திற்கே பெரும் ஆபத்தான சண்டையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். சரித்திரத்தின் முக்கியமான சமயமும் இதுவேயாகும். நம்முடைய தாய் நாட்டிற்கு எதிரியின் படையெடுப்பு நேருமோவென்ற பயமும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பிரிடனின் உதவியால் அது வெகுதூரம் ஒதுக்கப்பட்டுமிருக்கிறது.

இரண்டாவதாக, மிகக் கடுமையாக நடக்கும் இந்த யுத்தத்திற்கு முழுயுத்தம் என்று பெயர். ஏனென்றால் ஒவ்வொரு ஸ்திரீ, புருஷன், குழந்தையும் ஈடுபட்டு யுத்தரங்கத்திலும் உள்நாட்டிலும் நடக்கிறது. தேசத்தின் உணவுப்பொருளைப் பயிரிடும் குடியானவனும், ஆயுதங்களைத் தயாரிக்கும் மெகானிக்கும், யுத்தரங்கத்தில் சிப்பாயும் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த யுத்தத்தின் உள்நாட்டு நிலைமைதான் அதிக முக்கியமானது. இந்த அறிக்கையும் பொதுமக்களின் முன்னணி சிதைந்து விடாமல் செய்கிறது. இது ஒரு கஷ்டமான காரியம் தான். ஏனென்றால் நாம் பொதுமக்களின் மனதைத் திடப்படுத்த நினைக்கிறோம். பொதுமக்கள் கலவரமடையாமல் ஒற்றுமையுடனிருக்க வேண்டுமென்றும் ஜெர்மனி, ஜப்பான், இதாலி முதலியோரின் பொய் பிரசாரத்திற்கு வசமாகக் கூடாதென்றும் நாம் எடுத்துச் சொல்லுகிறோம். இதை பகீரதப் பிரயத்தனம் என்றே சொல்லலாம். இருந்தாலும் நாம் விடாமுயற்சியுடன் இருந்தால் வெற்றி பெறலாம் என்று ஆசை யுடனிருக்கிறோம்.

இந்த ஆசையும் மிக உயர்ந்ததுதான். ஏனென்றால், மதம், சரித்திரம் இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு நமது வேலையைச் செய்து வருகிறோம். உலகத்திற்கு எப்போதாவது அரசியல், ராணுவம் முதலியவைகளால் கெடுதி ஏற்படும்போல் இருந்தால் நல்லெண்ணம், சமாதானம் முதலியவைகளிருந்தால் தான் அமைதி ஏற்படும். நாமும் இந்த இரண்டையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறோம்.

நாம் சரியான காரணத்தைக் கொண்டு சண்டை செய்வதால் நாம் பலம் பெற்றிருக்கிறோம். பலமிருப்பதால் மேலான நம்பிக்கையுமிருக்கிறது.

**நேசநாடுகள்.** நாம் தனிமையாக இல்லை. 30 நாடுகளின் பலம் நம்முடன் இருக்கிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமை 30 நாடுகள் ஒன்று சேர்ந்து, இந்தச் சண்டையில் வெற்றி பெறலாம் என்று நிச்சயித்த விஷயம் சரித்திரத்திலேயே விசேஷமானது. இவ்விதமான அரசியல் மாறுதல்களில் தோட்டி முதல தொண்டமான்வரை ஒன்றுசேர்வது சகஜமானாலும், அச்சுநாடுகளை எதிர்க்கும் விஷயத்தில் ஒரே மனப்பான்மையுடன் அன்று காணப்பட்டனர். ஸர்வ தேசங்களையும் ஏகோபித்து அமைக்கும் வேலையிலும் ஈடுபட்டனர்.

இதற்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட ஸர்வ தேசச் சங்கம் மறைந்து போனாலும் இனி ஏற்படப்போகும் ஐக்கியபத்தியம் கெட்டுவிடாது. இது முதலில் அட்லாண்டிக்கில் ரூஸ்வெல்டு-சர்ச்சில் சந்திப்பிலேயே ஆரம்பமாயிற்று. பிறகு மாஸ்கோவிற்கு ஈடன் சென்றபோதும், சைனாவிற்கு வேவல் சென்றபோதும், விஸ்தாரமடைந்தது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட ஒற்றுமையில் தற்சமயம் 30 நாடுகள் சேர்ந்திருக்கின்றன.

இதற்கு மூலகாரணம் பிரிடன்தான். பிறகு இதை ஜனாதிபதி ரூஸ்வெல்டு அபிவிருத்தி செய்தார். ராஜீய நைபுண்யத்தை வெளிப்படுத்திக்கொண்டு அமெரிக்கக் கொடி விழா தினத்தின்போது மற்றநாடுகளின் கொடிகளையும் வைத்துக்கொண்டாட வேண்டுமென்று ரூஸ்வெல்டு தீர்மானித்தார்.

இதுவே ஸர்வ தேசங்களின் ஒற்றுமைக்கு ஒரு அடையாளமாகக் காணப்பட்டது. ஆனால் கொலை, கொடுமை முதலியவைகளால் பயத்தை விளைவித்துக்கொண்டு அச்சுநாட்டினரும் "புதுதிட்டம், பொதுக்ஷேமம்" முதலியவைகளை ஸ்தாபிக்கப் பார்க்கிறார்கள். நேசநாடுகள் யாவருடைய ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொண்டு தங்களுடைய லக்ஷியத்தை அடையப்பார்க்கின்றனர் அச்சுநாடுகளோவெனில் பலாத்காரம், ஆக்கிரமணம் முதலியவைகளால் தங்களுடைய லக்ஷியங்களை ஸ்தாபிக்க முயலுகின்றனர். பலாத்காரத்தால் செய்யப்படும் காரியம் சிறிது நாளைக்குத்தான் நிலைத்திருக்கும். பிறகு ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டினுள்ளோரின் வெறுப்பும், எதிர்ப்பும் ஏற்படும். ஒற்றுமையென்பது ஸ்தாபிக்கப்படுமேயானால் இதற்குமுன் பகைவர்களாக இருந்தாலும் ஒன்றுசேர்ந்து கொள்ளுவார்கள். நாஸிகளின புதுதிட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் குலைந்துவருகிறது. முஸோலினி அச்சுநாட்டு ஒப்பந்தத்தில் இல்லையென்றே சொல்லிவிடலாம். ஜப்பானையும் ஜெர்மனியின் சிநேகிதனென்று சொல்லமுடியாது. ஜெர்மனிக்குப் போட்டியாக ஜப்பான் டச்சுக் கிழக்கிந்திய நாடுகளைப் பிடித்திருக்கிறான். ருமேனியாவும், ஹங்கேரியும் டிரான்ஸல்வேனியாவைப் பிடிப்பதற்காக ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளுகின்றனர்.

தனது நிலைமை இவ்வாறிருக்க பிரிடனைக்கண்டு பொறாமைப்பட்டு, ஒரு பக்கம் அமெரிக்கா வசமும் மற்றொரு பக்கம் ருஷ்யா வசமும் பிரிடன் அகப்பட்டுக்கொண்டிருப்பதாக மட்டில் எதிரிகள் சொல்லுகின்றனர். ஆனால் உலகத்திற்கே தலைமை வகிக்கும்படியான விதத்திற்கு பிரிடன் நடந்துகொண்டுவருகிறது.

வி வி வி வி .வி வி வி

**பஸிபிக் வெற்றி: ஆனால் யாருக்கு ?** ஜூன் மீ 9உ செய்யப்பட்ட ஒரு ஜப்பானிய ஒலிபரப்பில் 'ஜப்பானியக் கப்பற்படை எங்கே சென்றாலும் அங்கே வெற்றிதான்' என்று சொல்லப்பட்டது உண்மைதான். ஆனால் வெற்றி யாருக்கு? என்று கேட்கவேண்டும். கொழும்பு, பவளக்கடல், மிட்வே தீவு முதலிய இடங்களில் நடந்த சண்டைகளே இந்தக் கேள்விக்கு பதிலைத் தருகின்றன. பேர்ல் துறைமுகத்தில் ஜப்பானியர் செய்த திடீர் தாக்குதல் இனி செய்யமுடியாது. அதைத்தெரிந்துகொள்ளாமல் கொழும்புபேரில் தாக்குதல் செய்தபோது வெற்றி ஜப்பானுக்கு இல்லையென்று காண்பிக்கப்பட்டது. பவளக்கடலில் நடந்த சண்டையில் ஜப்பானியருக்கு ஒன்றிரண்டு விமானமேற்றிய கப்பல்கள் நஷ்டமாயின. ஸிட்னியில் ஜப்பானியரின் 4 நீர்மூழ்கிகள் நஷ்டம், மிட்வேயில் இரண்டு மூன்று விமானமேற்றும் கப்பல்கள் மூழ்கின. மற்றும்

இரண்டு சேதமாயின. இவைகளைத்தவிர கப்பல்கள் நஷ்டம் இன்னும் அதிகம். மிட்வே தீவில் நடந்த சண்டையில் எதிரிக்கு 'டிராபால்கர,' சண்டையில் முன்பு பிரெஞ்சுக்காரர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

மிட்வே தீவையும், டச்சுத் துறைமுகத்தையும் எதிரி தாக்கியதற்கு பலகாரணங்களிருக்கலாம். ஆனால் தனது நாட்டைக் காபந்து செய்துகொள்ளவும், ஆஸ்திரேலியாவிற்கு மத்திய பஸிபிக் மூலமாக அமெரிக்க ஸப்ளைகள் போகாதபடி தடுக்கவும்தான் எதிரி அம்மாதிரி செய்திருக்கிறான். மேலும் ஹோனோலூலுவிற்கு அப்பால் அமெரிக்கக் கப்பற்படைச்சென்று வேவுபார்க்கவிடாமல் செய்து தான் ஆஸ்திரேலியாவரை முன்னேறலாமென்றும் நினைத்திருக்கிறான். மிட்வே தீவுக்கு அருகே மூன்று ஜப்பானிய யுத்தக்கப்பல்கள் கொண்டுவரப்பட்டிருந்ததால் ஏதோ பெரும் வகையான தாக்குதல் செய்யலாமென்று ஜப்பான் நினைத்திருந்தது. ஆனால் எதிர்பார்த்தபடி அதற்கு வெற்றிகிட்டவில்லை, முன்னேற்றப் போரைத் தற்காப்புப் போராகமாற்றிக்கொண்டு பயந்துவிரைவாக ஓடிவிட்டது.

வி வி வி வி வி வி வி

**அட்லாண்டிக் யுத்தம்.** ருஷ்யத் துணைக்கப்பல் கூட்டம் சேதமில்லாமல் திரும்பி வந்துவிட்டது. இருந்தாலும் அட்லாண்டிக் யுத்தம் முடிந்துவிட்டதாக நினைக்கக்கூடாது. சென்ற வருஷத்தில் ஐஸ்லாந்தை நேசநாடுகள் வியாபித்துக்கொண்டபிறகு பிரிடனுக்கு மேற்குப் பக்கமாக எதிரி நடமாட்டம் செய்யமுடியாமல் கிழக்கிலும் தெற்கிலும் முக்கியமாக கரிபியன் கடல் பக்கமாகத் தாக்குதலை மாற்றிக்கொண்டிருக்கிறான். பிரிடிஷ் கடற்கரை, மத்தியதரைக்கடல், மேற்கு ஆபிரிகா, இந்து மஹாசமுத்திரம் முதலிய கடல்மார்க்கங்களில் எதிரி தொந்தரவு இல்லை ருஷ்யாவிற்குப்போகும் வடக்கு மார்க்கம் அதிகமாகக் காவல்புரியப்பட்டு வருவதால போக்குவரத்து ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மெக்ஸிகோ சண்டையிலீடுபட்டதற்கு கரபியன் கடலிலும் காவல் புரியப்பட்டு வருகிறது. இதன் வழியேதான் வெனிஸுலா, மெக்ஸிகோ முதலிய நாடுகளின் எண்ணெய் வெளிநாடுகளுக்குச் செல்லுகிறது. அங்கேதான் அட்லாண்டிக்குக்கும் பஸிபிக்குக்கும் இடையிலுள்ள பனமா இருக்கிறது. அங்கு காவல் புரியப்படுகிறது. கரிபியன் கடலுக்கு அருகிலுள்ள நடுநிலை நாடுகளுக்கு அருகில் எதிரி நீர்மூழ்கிகள் வந்தால் எளிதில் கண்டுபிடிக்கப் படுகின்றன.

மே மாதத்தில் 7,67,000 டன் கப்பல்களை அமுக்கிவிட்டதாக ஜெர்மானியர் கூறுவது கேவலம் பிரசாரத்திற்காகச் சொல்லப்படும் எண்ணிக்கைதான். ஆனால் இதற்குப் பிரதியாக மே மாதத்தில் அமெரிக்க உற்பத்தி 6,32,000 டன் கப்பலென்றும், பிரிடிஷ் உற்பத்தி 1,00,000 டன் கப்பலென்றும், கனடாவில் 1,00,000 டன் உற்பத்தியென்றும் மொத்தம் 8,32,000 டன் என்றும் நாம் சொல்லுவோம்.

வி வி வி வி வி வி வி

**தரைப்போர் முனைகள்.** கார்கவ்வில் கடுமையான தாக்குதல்களும் சுறுசுறுப்பான எதிர்ப்புகளும் நடக்கின்றன. மறுபடி டிமோஷென்கோ தாக்குதலை ஆரம்பித்திருக்கிறான். வான்பக் இரண்டாவது கார்கவ் யுத்தத்திற்காக 60 சைனியப் பகுதிகளை ஈடுபடுத்தியிருக்கிறான். முடிவு இன்னும் தெரியவில்லை.

ஸெபாஸ்டாபூல் சண்டையும் மிகக்கடுமையாக நடைபெறுகிறது. ருஷ்யக் கருங்கடல் படை உதவிக்குவந்திருக்கிறது.

லிபியா யுத்தத்திற்கும், கார்கவ், ஸெபாஸ்டாபூல் யுத்தத்திற்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவை இரண்டாலும் மத்தியக் கிழக்கை நோக்கி பின்ஸர் படையெடுப்பு நேருமென்றும் சொல்லப்படுகிறது. எது எப்படியானாலும் தேவாஸுர யுத்தம்போல் நடைபெறுகிறது. இதில் கடற்கரையை அடைவதற்காக ரோமல் பெரும் பாடுபடுகிறான். ஆனால் ரிச்சியின் தீவ்ரயத்தனத்தினால் எதிர்க்கப்படுகிறான்.

சைனாவில் சுஹ்ஸீன், யூஷான் இரண்டும் எதிரிவசமாகிவிட்டன. இருந்தாலும் சைனா சண்டை செய்கிறது. சைனாவின் தலைவர் சொல்லும் விதமாக, 'ஆறு வருஷ காலமாகச் சண்டையிலீடுபட்டிருந்தாலும் யத்தத்தில் அலுப்பு ஏற்படவில்லை. இன்னும் எவ்வளவு தியாகம் தேவையாக இருந்தாலும் சைனா பின்வாங்காது'.

இந்தியா ஏஜெண்டு ஜெனரல் ஸர் ஜப்ருல்லாகான் பின்கண்ட விதமாக அறிவிக்கிறார். 'சீனர்கள் எதிர்த்து நிற்பதற்கு சுக்கின் திருஷ்டாந்தமாக இருக்கிறது. ஒற்றுமையாக நிற்பதே வெற்றியடைவதற்கு ஒரு காரணம் என்றும் காண்பித்திருக்கின்றனர். இதைக்கொண்டு முடிவான வெற்றியையும் அடைந்துவிடலாம்! கஷ்ட நிலையிலிருந்து சைனா மேன்மையை அடைகிறது. 'குண்டுகள் வீடுவாசல்களைத்தான் கெடுக்க முடியும். ஜனங்களின் உணர்ச்சியைக் கெடுக்க முடியாது'.

வி வி வி வி வி வி வி

**ஆங்கிலேய-ருஷ்ய ஒப்பந்தம்** இவ்வாரத்தில் ஏற்பட்டிருக்கிறது. இது ராணுவ விஷயங்களுக்காக ஏற்பட்டிருந்த போதிலும் சிநேக முறையில் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லலாம். தற்போதய நிலைமைக்கும், இனி ஏற்படப்போகும் நிலைமைக்கும் ஏற்றவாறு, சென்ற ஜூலை மாதத்தில் கையெழுத்தான கிரிப்ஸ்-மாலடோவ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளும் ஈடன், பீவர்புரூக், அவெரெல் ஹாரிமான் மாஸ்கோவில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் படிக்கும், சமீபத்தில் லண்டனில் மாலடோவ் செய்த பேச்சு வார்த்தைகளின் படிக்கும் உதவி செய்யப்படும். 20 வருஷ காலம்வரை இரு நாடுகளுக்கும் ராணுவம், பொருளாதாரம் இவைகளில் ஒத்துழைப்பு ஏற்படும். யுத்தத்திற்குப் பிறகு சமாதானம் ஏற்படுத்துவதில் அட்லாண்டிக் சாஸனத்தின் படி இருநாடுகளும் சேர்ந்துகொள்ளும். 1942-ல் இரண்டாவது போர்முனையை ஏற்படுத்தும் விஷயம் பரிசீலனை செய்யப்படும். வெகுகாலமாக எதிர் பார்த்திருந்த இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது. 'சமாதான காலங்களில் ஏற்படுத்த முடியாத சிநேகம், யுத்தத்தின் பயனாக ஏற்பட்டுவிட்டது. இவ்வித ஒற்றுமையில்லாமல் ஐரோப்பாவில் தற்சமயத்திலும் இனியும் பத்திரமே ஏற்படாது'. என்று மிஸ்டர் ஈடன் சொல்லியுள்ளார்.

இரண்டாவது போர்முனையென்ற அறிவிப்பே எதிரிக்கு பயத்தை உண்டாக்கியுள்ளது. அதன் பயனாக லுப்ட்வாபியின் விசேஷப்பகுதிகள் பிரிடிஷாரை இறங்க விடாமல் செய்வதற்கு மர்மான்ஸ்கிற்கு வந்திருக்கின்றன. அட்லாண்டிக்கின் பக்கமாக நாஸி பீரங்கி நிலயங்கள் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன. யுத்தக்கப்பல்கள் அணுகாமல் செய்ய துருப்பு ஸ்தாபனங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. கடற்கரைப் பிரதேசத்திற்கு உட்புறத்தில் 3 தற்காப்பு அணிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கும் பின்னால் மோட்டார் படைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. புதிய பகுதிகளும் கொண்டுவரப்பட்டுள்ளன.

வி வி வி வி வி வி

**அமெரிக்கா-விஷி.** அமெரிக்க உணவுகளேற்றிய கப்பல்கள் பிரெஞ்சு மேற்கு ஆபிரிக்கா அனுப்பப்படுமென்று ஜூன் 12-ம்௳ கார்டல் ஹல் அறிவித்ததிலிருந்து விஷி சம்பந்தமாக அமெரிக்காவின் நோக்கத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிற விஷயம் தெரியவருகிறது. லவால் அதிகாரத்திற்கு வந்ததும் இவ்வுணவுக் கப்பல்கள் செல்லாமல் அமெரிக்கா செய்துவிட்டது. லீஹியையும் திரும்ப அழைத்துவிட்டது.

இதற்குக் காரணங்கள் யாவருக்கும் தெரிந்ததுதான். தற்போதுள்ள யுத்த நிலைமையில் பிரெஞ்சுக் கப்பற்படை ஹிட்லரின் வசம் ஒப்படைக்கப்பட்டால் அட்லாண்டிக்கில் அதனால் ஏற்படக்கூடிய பாதகமென்னவென்று அமெரிக்காவிற்குத் தெரியும். மேலும் அமெரிக்காவுடன் விரோதமேற்பட்டால் ஜெர்மனியுடன் விஷி சேரவேண்டிய அவசிய மேற்பட்டு அதனால் விஷி குலையவேண்டி

வருமென்றும் அமெரிக்காவிற்குத் தெரியும். ஆனால் சாம்ராஜ்யம் தங்களுக்கு இருப்பதாக இன்னும் பிரெஞ்சுக்காரர்கள் கௌரவமாக நினைத்துக்கொண்டிருப்பதால் வடக்கு மேற்கு ஆபிரிக்காவிலுள்ள நாடுகள் ஹிட்லர் வசமாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டி வந்தது. மேலும் ஸ்பெயின், போர்ச்சுகல், ஸ்விட்ஸர்லாந்து முதலிய நாடுகளுடன் பிடேன் ஒன்று சேர நினைத்திருக்கிறான்.

ஆனால் பிடேனுடன் உறவுகொண்டாட ஹிட்லர் தயங்கவில்லை. பிரிடிஷ் விமானப்படை பாரிஸைத் தாக்கியதும் ஹிட்லர் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பிரான்ஸுக்கும் அமெரிக்காவிற்கும் விரோதத்தை மூட்ட நினைத்தான். ருஷ்யப் பொதுவுடமைக் கக்ஷிக்கு விரோதமான அபிப்பிராயங்களையும் தூண்டிவிட்டான். இருந்தாலும் அமெரிக்காவுடன் பிரான்ஸுக்கு சிநேகம் இருக்கிறது. ஜெர்மனிக்குத் தேவையிருக்கும் வரை பிரெஞ்சுக்காரர்களைத் தனியே ஹிட்லர் விடமாட்டான் என்பது பிடேன் கண்டுகொண்டான். ஜெர்மனிக்குத் தோல்வி ஏற்படுமென்றும் பிடேன் தீர்மானித்திருக்கிறான். ஆகவே பிடேன் கோயரிங பேச்சு பயன்படவில்லை. பிடேன் ஜெர்மனியை விரோதித்துக்கொள்ள சமயத்தை மாத்திரம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். சமீபத்தில் பிடேன் 'லவாலும் நானும் ஒற்றுமையுடன் நடந்து கொள்ளுகிறோம். எங்கள் இருவருக்கும் அபிப்பிராய பேதமே இல்லை' என்று சொல்லியிருந்தாலும் இந்த சிநேகம் உண்மையானதல்ல. லவாலைப் பிடேன் வெறுக்கிறான். இருந்தாலும் லவாலைத் தனியே விட்டுவிடவும் முடியவில்லை. வெர்ஸெயல்ஸை ஜெர்மானியரிடமிருந்து மீட்டுவதற்கு லவால் உதவியாக இருப்பான் என்றும் நினைக்கப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**அச்சு நாட்டுப் பிரசாரம்: பொய்களும் தற்புகழ்ச்சிகளும்.**

1. மானர்ஹீமை அவனது 75 வது வயது பூர்த்தியானதற்காகக் கொண்டாட ஹிட்லர் பின்லாந்து சென்றான். உண்மைக் காரணம் யாதெனில் பின்லாந்தில் ஏற்பட்டுள்ள மனத்தாங்கலைப் போக்கடிப்பதற்குத்தான்.

2. இந்தியா பூராவும் ராணுவச் சட்டம் அமுலிலிருக்கிறது. இது முழுப் பொய்.

3. ஜப்பானிய வியாபார மந்திரி மிஸ்ட்டர் மிட்ஸுடாகா மோரி பர்மாவில் கிடைக்கும் மூலப் பொருள்கள் 120, 130 வருஷங்களுக்கு தாங்குமென்று ஒலிபரப்பியுள்ளான். இது அதிக ஆசையின் பேரில் சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் அங்கிருந்து விரட்டப்படும். 100, 125 வருஷம் ஒரு நாளும் தாஙகாது.

4. ஹீட்ரிச்சின் கொலையில் பிரிடிஷாருக்கும் சம்பந்தமிருப்பதாக ப்ரேக் போலீஸ் கண்டுபிடித்துவிட்டது 'கொலையாளிகள் குடை விமானத்திலிருந்து போடப்பட்டனர்'.

இது உண்மையானல் 275 ஒன்றுமறியாத செக்கர்களை ஏன் கொல்லவேண்டும்?

---

## பிரிடிஷ் விமானப்படையில் இந்திய விமான ஓட்டிகள்.

"வாழ்க்கையில் அநேக தீரச்செயல்கள் நிறைந்துள்ளது" என்று கிரேட் பிரிடனிலிருக்கும் பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த இந்திய விமான ஓட்டிகளில் ஒருவர் தன்னுடையவும், இன்னும் தன்னுடைய சகாக்களின் அனுபவங்களையும் எடுத்துச்சொன்னார்.

ஒரு வருஷத்திற்குமுன் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் அச்சாணிபோலுள்ள பிரிடன் தேசம் அபாயத்திற்குட்பட்டிருந்தபொழுது இந்திய ஆகாயப்படை

வாலண்டியர் ரிஸர்வ் பகுதியைச் சேர்ந்தவர்களில் ஒரு கோஷ்டி தங்கள் நாட்டை விட்டு பிரிடிஷ் விமானப்படையில் ஒத்துழைக்கச் சென்றனர். பிரிடன்பேரில் ஜெர்மனி நடத்திய சண்டையில லுப்ட்வாபியைத் தோற்கடிக்கச்செய்த சாமர்த்தியம் வாய்ந்த பிரிடிஷார்கள் பட்ட கஷ்டத்தில் இவர்களும் பங்கிட்டுக் கொண்டனர். இப்பொழுது இவ்விளைஞர்கள் தங்கள் போர் திறமையையும், பிரயோஜனத்தையும் காட்டிவருகின்றனர். மேலும் பிரிடன் பாதுகாப்பில் பங்கெடுத்துக்கொண்டவர்களில் இவர்கள்தான் முதன்முதலாக உத்தியோகமுறையில் இந்தியப் பிரதிநிதிகளாக இருந்து மிகவும் பெருமையடைந்திருக்கிறார்கள்.

பிரிஸியன் தீவுகளுக்கருகாமையில் சென்றுகொண்டிருந்த எதிரியின் பெரிய கப்பலை விமான உத்தியோகஸ்தர் மிர்ஸாமேடிக்கான் என்பவர் தாக்கி, அழித்ததில் இந்தியர்களின் ஆகாயப் போர் திறமையையும், வீரத்தையும் ஜெர்மானியர்களை உணரச் செய்திருக்கிறார். பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த இந்திய விமான ஓட்டிகளின் பெரும் தீரச்செயல்களில் மேற்சொல்லியது ஒரு திருஷ்டாந்தம்தான்.

கிரேட் பிரிட்டனில் அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் அவர்களுடைய கூர்மையான புத்தியையும், ஊக்கத்தையும் யாவரும் கண்டு புகழ்ந்திருக்கிறார்கள். ஜெர்மனிக்கு ஏற்பட்ட தாக்குதலினால் பிரிடனைப் பாதுகாத்துவரும் நமது வாலிபர்களுக்குப் பயந்து ஜெர்மனி மீண்டும் படையெடுக்க எத்தனிக்காமலிருப்பதைப் பார்க்க, இந்திய விமான ஓட்டிகள் போருக்குப் போதுமான சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று புகார் செய்கிறார்கள்.

பிரிடிஷ் விமானப்படைப் பகுதியிலிருந்து இந்திய விமானிகளைப்பற்றி உத்தியோகமுறையில் வெளிவரும் அறிக்கைகள் யாவும் படிப்பதற்குத் திருப்திகரமாக இருக்கிறது. இராக் காலத்தில் சண்டை போடுவதில் விசேஷ திறமையை ஒரு விமான ஓட்டி காட்டியிருக்கிறார். நல்ல பைடர் விமானங்களை ஓட்டிச்செல்ல சாமர்த்தியம் வாய்ந்தவர்களாகவும் சிலர் இருக்கிறார்கள். துவி யந்திர பைடர் விமானத்தை நடத்திச்செல்லக்கூடிய உயர்தரப் பயிற்சியும் ஒருவர் பெற்றிருக்கிறார். இன்னும் மற்றவர்கள் பாம்பர் விமானங்களில் வேலை பார்ப்பதற்கான விசேஷ சாமர்த்தியம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். கடைசியில் இந்திய விமானி ஒருவருக்கு ஒரு படைப்பகுதிக்குத் தலைவராக ஆகக்கூடிய திறமை இருப்பதாகவும அவருடைய போதகாசிரியர்களுக்குத் தோன்றுகிறது.

இந்திய இளைஞர்கள் ஒருவிதத்திலும் சுலபமாகக் காலத்தைக் கழிக்கவில்லை. பிரிடிஷ் விமானப்படையில் பயிற்சிபெறும் அனுபவம் பார்ப்பதற்கு மிகவும் கடூரமாக இருக்கும். எப்படியிருந்தபோதிலும் இந்தியர்களில் பெரும்பாலோர் நல்ல பிரக்யாதிபெற்று, தேர்ச்சியடைந்திருக்கிறார்கள்.

இந்தியாவைவிட்டு பெரிய போருக்குச் சென்ற இந்திய விமான ஓட்டிகளில் 17 பேர்கள் நன்றாகப் பயிற்சியடைந்திருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் பாம்பர், பைடர் விமானப்படைப் பகுதிகளில் வேலைக்கு அமர்ந்திருக்கின்றனர். பயிற்சி பெறுவதிலும், விமானத் தாக்குதலிலும் சில இந்திய விமானிகள் உயிர் துறந்தனர். தங்கள் அருமைத் தோழர்களின் பிரிவுக்காக அவர்கள் துக்கிக்கிறார்கள். இன்னும் மற்றவர்கள் இறுதியில் வெற்றியடையும்வரை தங்கள், தங்கள் விமானப் பகுதியிலேயே இருந்து போர் நடத்திவருகிறார்கள்.

# அட்லாண்டிக்கடல் யுத்தத்தில் இந்திய கப்பல்வேலைக்காரர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

# 40,000 பேர்கள் தங்கள் உயிரையும் இழக்கத் தயாராகயிருக்கிறார்கள்.

(ஸர் ஆர்ச்சிபால்டு ஹர்டு என்பவர் எழுதியது.)

(1914-ம் வருஷம் முதல் 1918-ம் வருஷம் வரை நடந்த யுத்தத்தில் வியாபாரக் கப்பற்படையைப் பற்றி உத்தியோக முறையில் ஒரு சரித்திரம் இவர் எழுதியுள்ளார்.)

40,000 இந்தியர்கள் இப்பொழுது நடக்கும் அட்லாண்டிக் யுத்தத்தில் தங்களுடைய உயிரையும் தியாகம் செய்துவருகிறார்கள். எதிரிகளின் 'யு' படகுகள், ஆகாய விமானங்கள் இவைகளின் தாக்குதல்களுக்கும், பாம்பர் விமானங்கள் வெடிகுண்டுகள் வீசுவதற்கும், சுரங்க வெடிகளின் அபாயங்களுக்கும் உட்பட்டிருந்து, மிகவும் சாமர்த்தியத்துடன் இந்திய கப்பல் வேலைக்காரர்கள் சமாளித்து வருவது, கடல் யுத்த அபாயங்களில் அடிபட்டவர்களுக்கும்கூட வியப்பை உண்டாக்கி இருக்கிறது.

இவர்கள் வெறும் கப்பல் வேலைக்காரர்கள்தான். இவர்களின் தேக அமைப்பைப் பார்த்தால் வீரர்கள் என்று சொல்வதிற்கில்லை. ஆனால் அவர்கள் முதல் தரமான மாலுமிகள். வடதேசத்திலிருந்து வரும் ஜனங்களால் இந்தக் கடுமையான உஷ்ணகாலத்தில் வேலை செய்யமுடியவில்லை. ஆகையால் கீழ்ப்பிரதேசத்தில் முதல்தரமாக தொழில் நடத்தும் பிரிடிஷ் வர்த்தகக் கம்பெனிகள் வெகு காலமாக இந்தியர்களை வேலைக்கு நியமித்திருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய சௌகரியமும், உணவுக்கு வேண்டிய வசதியும் விசேஷமாக ஏற்பாடு செய்திருக்கின்றன. பி. & ஒ. (P. & O.), பிரிடிஷ் இந்தியா, ஆங்கர், பிபி (Biby), கிளான் அண்டு ஸிடிலைன்ஸ், க்யூனார்டு கம்பெனி இவைகளும் அந்தக் கம்பெனிகளில் அடங்கியுள்ளவை.

## முதல்தரமான மாலுமிகள்.

யுத்தம் ஆரம்பித்தது முதல் கீழ்திசையில் செல்வதும், இந்திய மாலுமிகள் வேலைபார்த்து வருவதுமான கப்பல்களில் அநேகம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் செல்லும்படி திருப்பிவிடப் பட்டிருக்கின்றன. முதலில் இந்தியர்களால் இந்தக் குளிரைத்தாங்க முடியாதென்று பயமுண்டாயிற்று. ஆனால் அவர்களை இப்பொழுது 7 சமுத்திரங்களிலும் பார்க்கக்கூடும். அவர்கள் அதற்குத் தகுந்தவாறு தேகத்தை சரிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் சாமான்களை ஏற்றிக்கொண்டு பிரிடிஷ் வர்த்தகக் கப்பல்கள் எங்கெங்கு செல்லுகின்றனவோ அங்கெல்லாம் இந்தியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். இச்சமயங்களில் அவர்கள் நடத்தையும், திறமையும், சமாளிக்கும் சக்தியும் மிகவும் மேன்மையானதாக ருசுவாகியிருக்கிறது.

சிலவருஷங்களுக்கு முன் வியாபாரக் கப்பல் தலைவன் ஒருவனுடன் கப்பல் வேலைக்காரர்களைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும் பொழுது இந்திய லஸ்கர்கள் மட்டும் இருந்தால் போதுமென்றும், உலகத்தில் வேறு ஊர்களிலிருந்து வருபவர்களைக்காட்டிலும், இவர்கள் கப்பல் வேலைக்குத் தகுதியானவர்கள் என்றும், உத்தரவைக் கீழ்படிவதில் மிகவும் பவ்யப்பட்டவர்கள் என்றும் சொன்னார். அவர்கள் எப்பொழுதும் முணுமுணுப்பதில்லை. எத்தகைய வேலையைச் செய்யவும் தயாராக இருந்தார்கள். சொல்வதற்குமுன் அவ்வளவு சீக்கிரத்தில் செய்துமுடித்தார்கள் என்றும் சொன்னார்.

# ஜெர்மனி-ஜப்பான் சிநேகம்-உண்மையா கதையா?

(வாஷிங்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலமாக கிடைத்தது.)

அச்சுநாட்டு சிநேகம் என்பது ஒரு கட்டுக்கதை என்று ஸாடர்டே ஈவினிங் போஸ்டு (Saturday Evening Post) என்ற பத்திரிகையின் பிரசித்த நிருபரான டமார்டி பெஸ் என்பவர் எழுதியுள்ளார். ஜப்பானியர் ஜெர்மானியருக்கு உட்பட்டவர்கள் இல்லையென்றும் தாங்களாகவே ஆக்கிரமண வேலையிலீடுபட்டிருக்கின்றனர் என்றும் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

"அமெரிக்க நாடுகளையும், பிரிடிஷ் பிரதேசங்களையும் ஜப்பான் தாக்கிய போது, தனது லக்ஷியங்களைச் சாதித்துக்கொள்ளவே தனக்கு ஏற்படும் நஷ்டங்களையும் ஜெர்மனிக்கு ஏற்படும் கெடுதலையும் கவனியாது அவ்விதம் நடந்துகொண்டது" என்று அவர் சொல்லுகிறார்.

பஸிபிக்கில் ஜப்பான் செய்த தாக்குதல் ஜெர்மனிக்குப் பாதகமான சந்தர்ப்பத்தில் செய்யப்பட்டது. ஏனென்றால் ருஷ்யச் சைனியங்களை மறுபுறம் தாக்க ஜப்பானியச் சைனியங்களை உபயோகித்துக்கொள்ளலாமென்று ஜெர்மனி நினைத்திருந்தது. ருஷ்யாவை ஜப்பான் தாக்கப்போவதாக ஜப்பான் பயமுறுத்தியிருந்தாலும் ஜெர்மனிக்குச் சாதகமாகயிருந்திருக்கும்.

## ஒத்துழைக்கும் தந்திரமல்ல.

அச்சுநாட்டு அங்கத்தினரைப்போல ஜப்பானியர் ஆரம்பத் தாக்குதல்களைச் செய்யவில்லை. ஆனால் 50 வருஷ காலமாக தாங்களாகத் தயாரித்துக் கொண்டிருந்த முறைகளின்படிதான் நாடுகளைப்பிடிக்க முயற்சித்தனர்.

"அச்சு நாடுகளுக்குள் ஒற்றுமை திடமாக இருக்குமேயானால் ஜூன் முதல் டிஸம்பர் வரை ஜெர்மனியை ருஷ்யாவில் தனியே சண்டைசெய்ய விடவேண்டிய அவசியம் என்ன?" என்று பெஸ் கேட்கிறார்.

ஜப்பானியர் ருஷ்யர்களைத் தனியே விடுவதற்கு இரண்டு நற்காரணங்களிருக்கின்றன. (1) ருஷ்யத் துறைமுகமான வ்ளாடிவாஸ்டாக்கிலிருந்து எளிதில் ஜப்பானியத் தொழிற்சாலை தளங்களையும், கப்பல் தளங்களையும் சேதப்படுத்திவிடலாம்; (2) கிழக்கு ஆசியாவிலும், தெற்கு பஸிபிக்கிலும் தாங்கள் ஊன்றிக்கொண்டால் ஐரோப்பிய நாடுகள் சுலபமாகத் தங்களைக் கலைக்க முடியாதென்று நினைத்து அந்த நாடுகளைப் பிடிப்பதில் ஜப்பான் ஈடுபட்டிருந்தது.

## எதிர்பார்த்திருந்த சமயம்.

ருஷ்யா மேற்கே ஜெர்மனியுடன் பூரா ஈடுபட்டிருந்த சமயத்தையும், பஸிபிக்கிலிருந்த அமெரிக்கக் கப்பற்படை அட்லாண்டிக்கிற்கு சென்றவுடனும் ஜப்பானுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது.

ஜப்பான் பயந்துகொண்டிருந்த நாடுகளெல்லாம் வேறுவிதமாக ஈடுபட்டிருந்தன. தனது காரியத்தில் ஜப்பான் வெற்றிபெற்றால் ஜெர்மனியோ மற்ற ஐரோப்பிய நாடுகளோ அதன் வெற்றிகளை மாற்றமுடியாது. மற்ற நாடுகளிடமிருந்து பயப்படுவதுபோல ஜெர்மனியிடமிருந்தும் ஜப்பான் பயந்துகொண்டுதான் இருக்கிறது.

## வியக்தமான சின்னங்கள்.

ஜப்பானின் திட்டங்களைப்பற்றி முன்னாடி ஜெர்மானியருக்கு ஒருவித தகவலும் இல்லையென்று ஜெர்மனியில் ஏற்பட்ட அடையாளங்களைக்கொண்டு தெரிகிறது என்று அந்நிருபர் எழுதுகிறார்.

ஜப்பான் சண்டையை ஆரம்பித்ததும் ஹிட்லர் கலவரமடைந்ததாகக் காண்பித்தான். எதிர்பாராத பரபரப்புடன் ஜெர்மன் சைனியங்கள் ருஷ்யாவின்

கிழக்கிலிருந்து பின்வாங்கின. அதில் ஏராள மனித நஷ்டமும் சாமான்களின் நஷ்டமும் ஏற்பட்டது. இதற்குக் காரணமென்னவென்றல் முக்கியமான சமயத்தில் தங்களை ஜப்பானியர் கைவிட்டதாகவே நாஸிகள் எண்ணினர்கள். தனியாகத் தாங்கள் வெற்றியடைய முடியுமோவென்ற சந்தேகமும் அவர்களுக்கு ஏற்பட்டது. ஜப்பானியர் இனி என்னசெய்யப் போகிருர்களோ என்றும் தெரியவில்லை.

### வெளித்தோற்றம் மாத்திரம் இருந்தது.

இருந்தாலும், அச்சுநாடுகளுக்குள் ஸ்நேகமிருப்பதாகமட்டில் ஹிட்லர் காண்பித்துக்கொண்டான். இந்த நிர்ப்பந்தத்தினுல் அமெரிக்காவுடன் சண்டை தொடுக்க நேர்ந்தது.

அச்சுநாடுகள் பலம் பெற்றிருப்பதாகமட்டில் பிரமாதமாகப் பிரசாரம் செய்யப்பட்டுவந்தது. உண்மை யாதெனில் ஜெர்மனியும் ஜப்பானும் பிரத்தியேகமாக தங்களுடைய லக்ஷியங்களைச் சாதிக்க முயற்சித்தன, அதாவது ஒவ்வொன்றிற்கும் சாம்ராஜ்யத்திலும் உலகாக்கிரமணமத்திலும் ஆசை இருக்கிறது.

---

## ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ளவர்களுக்கு ஸ்வதந்திரம் கொடுத்திருக்கிருர்கள்.

(வாஷிங்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம்).

பிலிப்பைன்ஸ் வாசிகளுக்குரிய பூர்ண ஸ்வதந்திரத்தை அவர்கள் அடைந்து வருவதாக பிலிப்பைன்ஸ் தீவுகளின் தரைத்தன ராணுவத் தலைவரான தளகர்த்தர் ஹெயாஷி என்பவர் உறுதி சொல்லியிருக்கிருர். இது எவ்வளவு மட்டில் உண்மை என்பதை ஜப்பானிய ராணுவத் தீர்மானங்கள் சிலவற்றைக் குறித்து அமெரிக்க நிபுணர்கள் விமர்சனம் செய்திருப்பதைப் பார்த்தால் தெரியவரும். இந்தத் தீர்மானங்களில் பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள ஜனங்களுக்கு என்ன தகுதி என்பதை ஜப்பானியர்கள் உணர்ந்திருப்பது தெரியவரும்.

பிலிப்பைன்ஸ் தீவுகளைப் பிடித்துக்கொண்ட உடனேயே ஜப்பானியர்கள் அங்குள்ள பாங்கிகளைக் கைப்பற்றிக்கொண்டனர். அங்கு வழங்கிவந்த நாணயங்களை சிலாவணியில்லாமல் செய்துவிட்டார்கள். அவைகளுக்குப் பதிலாக ஜப்பானிய ராணுவ நோட்டுகளை வழங்கினுர்கள். பழைய பிலிப்பைன்ஸ் நாணயங்களை மணிலா தேசத்தினர் உபயோகப்படுத்தியபொழுது அவர்களுக்குக் கடுமையாக அபராதங்களை விதித்தனர். சட்டப்படி நியமிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் நிர்வாக உத்தியோகஸ்தர் தங்கள் உத்தியோக ஸ்தலங்களில் ஆதிக்கம் செலுத்த சக்தியற்றவர்களாகப் போய்விட்டார்கள். அவர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் என்று சொல்லுவதற்கே முடியாமல்போய்விட்டது. டெய்வான் (Taiwan) ஜப்பானிய பாங்கு, யோகஹாமா ஸ்பீஷி பாங்கு இவைகளின் கிளை ஆபீஸ்களை பிலிப்பைன்ஸில் ஸ்தாபிக்க ஏற்பாடாயிற்று.

மேற்சொல்லிய விஷயங்களினுல் ஹேயாஷி பிரகடனத்தில் குறிக்கப்பட்ட ஸ்வதந்திரம் பண நிர்வாகத்திற்கு அன்வயிக்கத்தக்கதில்லை என்று தெரியவரும்.

### பிரசுர உரிமை கிடையாது.

ஜனவரிமீ 7-ம் தேதியிலிருந்து பிலிப்பைன்ஸ் தீவினருகிலிருந்த பேர்போன பிரசுர உரிமை, ஜப்பானியர் அத்தீவைக் கைப்பற்றியதிலிருந்து அவர்கள் போட்ட உத்தரவினுல் பிடுங்கப்பட்டுவிட்டது. ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் உத்தரவன்னியில் தினசரிப் பத்திரிகை, சஞ்சிகை, துண்டுப்பிரசுரம்

மற்றபடி எதுவும் அச்சிடமுடியாது. முந்திய பதிப்புகளை,மறு பதிப்புச் செய்ய வேண்டுமானால் அவைகளை ஜப்பானிய குணதோஷ விவேசகன் அனுமதித்தல் வேண்டும். மறு பதிப்பிட்ட பழைய பிரசுரங்களை விற்பனை செய்யக்கூடாது என்று தடைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அசனால் பேச்சு உரிமையையும், பிரசுர உரிமையையும் பற்றி ஹெயாஷி சிந்திக்கவில்லைபோல் தெரிகிறது.

## குற்ற விசாரணை ராணுவ நியாய இலாகாக்களில்.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஏற்கனவே அவ்வூர் வாசிகளுடைய ஸிவில் கிரிமினல் வியவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு அவர்கள் அரசாங்க விதிகளின்படி நியாய இலாகாக்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்பொழுது அவற்றை விட்டுவிட்டு, ஜப்பானிய ராணுவ நியாய இலாகாக்களில் அவர்களின் வியாஜ்ஜியங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஜனவரி௴ 6-ம் தேதி ஜப்பானியர்கள் பிறப்பிவித்த கட்டளையாவது :—"ஜப்பானிய சிப்பாய்களுக்கோ, மற்றவர்களுக்கோ, யாரேனும் ஒருவன் காயப்படுத்தினாலோ அல்லது கொல்ல எத்தனித்தாலோ அவன் உடனே சுட்டுக்கொல்லப்படுவான். அப்படிக் காயம் உண்டாக்கினவனோ அல்லது காயம் உண்டாக்க எத்தனித்தவனோ அகப்படாமல் ஓடிவிட்டானானால், அந்த சம்பவம் நடந்த தெருக்களில் வசிக்கும் பிரதானமான மனிதர்களில் 10 பேர்களை பிணையாளிகளாக வைத்துக்கொளளுவோம்" என்பதுதான். மேலும் மேற்சொல்லிய உத்தரவினால் ஜப்பானியத் துருப்புகள் என்ன, பொது மக்கள் என்ன, இவர்கள் எவ்வித குற்றம் செய்தாலும் அவர்களுக்குத் தண்டனை கிடையாது. ஆனால் ஜப்பானியர்களுக்கு விரோதமாக நடத்தப்படும் செய்கைகளுக்கு மரண சிக்ஷை விதித்திருக்கும் இந்த உத்தரவினால் இரட்டிப்பு பயம் ஏற்படுகிறது. ஏனென்றால், பிலிப்பைன்ஸிலுள்ள நியாய இலாகாக்கள் ரத்து செய்யப்பட்டன. அதனால் சட்ட ரீதியாக நியமிக்கப்பட்டிருக்கும் அங்குள்ள மாஜிஸ்திரேட்டுகள், தங்கள் உத்தியோகத்தைப் பார்க்கமுடியாமல் தடைப்பட்டிருக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸைப் பிடித்தவுடன் அத்தீவு வாசிகளுக்கு முழு ஸ்வதந்திரமும் அடைந்துவிடுவார்கள் என்று ஜஸ்டிஸ் ஹெயாஷி சொல்லும் பொழுது நியாய இலாகாவில் ஸ்வதந்திரம் வேண்டுமென்பதை அவன் எண்ணி இருந்திருக்கமாட்டான்.

## டெலிபோன், தந்தி சாதகம் இவர்களுக்கு இல்லை.

இப்பொழுது ரேடியோ, டெலிபோன், தந்தி போக்குவரத்து சாதகங்கள் பிலிப்பைன்ஸ் தீவினர்களுக்குக் கிடையாது. ஜப்பான் பிரசாரத்தை ஒலிபரப்பும் நிலயங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளைத்தான் அவர்கள் ரேடியோ மூலம் கேட்க வேண்டும். டெலிபோன், தந்தி இந்த சாதகங்களை பிலிப்பைன்ஸ் வாசிகள் முற்றிலும் உபயோகிக்கமுடியாமல் தடைப்பட்டிருக்கின்றனர்.

ஹெயாஷி குறிப்பிட்ட பூர்ண ஸ்வதந்திரத்தில் இத்தகைய ஸ்வதந்திரங்கள் அடங்கியிருக்கமாட்டா.

மேலும் அந்த உத்தரவினால் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திலுள்ள முக்கிய ஸ்தாபனங்களில ஜப்பானியர் புகுந்துகொண்டிருக்கின்றனர். உத்தியோகம் பார்த்துவரும் கொஞ்சம் பிலிப்பைன்ஸ் வாசிகளும், ஜப்பானியர் வருதிப்படி நடப்பதற்காக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவேயுள்ள சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டது. ஜனங்களின் சௌகரியத்திற்காக சட்ட நிர்மாணம் செயயு தேர்தலில் வெற்றிபெற்ற பிரதிநிதிகள் அசக்தர்களாகவிட்டார்கள். அதற்குப் பதிலாக, தலைவர்கள் எல்லாம் ஜப்பானியர்களின் போதனைக்குட்பட்டிருக்கிறார்கள்.

# ஜப்பானின் கொள்கையைப்பற்றி ஜப்பானிய ராஜ தந்திரியின் அபிப்பிராயம்.

# சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருந்துகொண்டு சந்தேகங்களை அமுக்கவேண்டும்.

(D. J. இவான்ஸ் என்பவர் எழுதியது).

ஜப்பானின் அரசியல் தந்திர முறைகளைப்பற்றி புஸ்தகங்களிலும், வியாசங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை ஹெயாஷிபோலுள்ளவர்கள் எழுதியுள்ளார். ஹெயாஷி சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஜப்பானில் இருந்துவந்த ராஜ தந்திரிகளில் சேர்ந்தவர்.

டோகியோவில் வெளிவரும் பத்திரிகைகளில் ஒன்றில் ஹெயாஷியின் குறிப்புகள் வியாசங்கள் மூலம் பிரசுரிக்கப்பட்டு வந்தன. அதில் குறிக்கப்பட்ட விவரங்கள் அரசாங்கத்திற்கு இழிவாக இருந்தபடியால், அவ்வியாசங்களை அன்னிய நாடுகளில் பிரசுரிக்கவிடாமல் தடுக்க ஜப்பானிய அரசாங்கம் பிரயத்தனப்பட்டது. ஆனால் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்ட அவ்வியாசங்கள் திருட்டுத்தனமாக வெளிநாடுகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டு ஷாங்கேயிலும், லண்டனிலும் பிரசுரிக்கப்பட்டன.

சீனா-ஜப்பான் யுத்தம் முடிந்த கொஞ்ச காலத்திற்குள் ஹெயாஷி 1895-ம் வருஷம் கோடை காலத்திற்குள் எழுதின வியாசங்களை எல்லாம் அவர் சுருக்கமாக குறிப்புகளில் கண்டெழுதினார்.

சீனர்களுக்குச் சொந்தமான லியாதுங் (Liaotung) தீபகற்பத்தை யுத்தத்தில் ஜப்பானியர் கைப்பற்றியதை விட்டுவிடும்படி ஐரோப்பிய நாடுகள் ஜப்பானை நிர்ப்பந்தித்தன. அதனால் அப்பிரதேசத்தை விட்டுவிட்டதில் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளும், ராஜ தந்திரிகளும் அவமானம் தாங்கமாட்டாமல் வெகு கோபத்துடன் சொன்ன பிரகடனங்கள் யாவும் அச்சரிதையில் கண்டிருந்தன. அந்த அவமானத்திற்குப் பிறகு ஜப்பானியர்கள் பழிக்குப்பழி வாங்குவதாகத் திட்டம் போட்டுக்கொண்டிருந்ததாக வியக்தமாகத் தெரிகிறது.

### நல்ல சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருப்பது.

ஜப்பானின் அந்நிய நாட்டு இலாகா உதவி மந்திரிப் பதவியை ராஜீனாமா கொடுத்த பிறகும், சீனாவிற்கு மந்திரியாக நியமிக்கப்படும் வரை இடையிலுள்ள அவகாசத்தில் ஹெயாஷி, என்பவர் ராணுவப்படை, கப்பற்படை பலத்தை அதிகப்படுத்துவதின் முக்கியத்துவத்தைப்பற்றி விஸ்தாரமாக எழுதியுள்ளார்.

ஏராளமாக புதிய கப்பல்கள் எச்செலவிலும் கட்டவேண்டும் என்றும் ஆதரித்தார். தற்போது ராணுவ நிலைமையை மாறுதலடையச் செய்யவேண்டியதை விரும்பினார். அயல் நாடுகளுக்குப் படைகளை ஏற்றிச்செல்ல போக்குவரத்து சாதனங்கள் ஏற்படுத்துவதற்காக கப்பல் போக்குவரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கோரினார்.

அதில் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க வாக்கியத்தை அவர் சேர்த்திருக்கிறார்:—

"ஜப்பானுக்கு விரோதமாக ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களை அமுக்குவதற்காக இப்பொழுது ஜப்பான் செய்யவேண்டியதென்னவென்றால் அது மௌனமாகக் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அதற்குள் ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் பலத்தை அதிகப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். கிழக்குப் பிரதேசத்தில் நிச்சயமாக சந்தர்ப்பம் ஒரு நாள் வாய்க்கும்.

இவ்வருஷங்களில் ஜப்பான் முற்றிலும் அமைதியாக இருந்துவிடவில்லை. சீனமக்களுக்கு ஜப்பானியர்கள் துன்பத்தை விளைவித்துத்தான் வந்தார்கள்.

1914-ம் வருஷத்தில் ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பே பிரிடிஷ் அமெரிக்க முயற்சிகளுக்கு இணங்கி ஜனநாயகத்தின் பாதுகாப்பிற்குச் சமாதான மாக இருந்துவருவதாக ஜப்பான் பாசாங்கு செய்தது.

## சீனுவிற்கு இட்ட கட்டளைகள்.

பெரிய வல்லரசுகள் யாவும் ஐரோப்பாவிலேயே கவனம் செலுத்தி வரும் பொழுது ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் தாங்கள் போட்டிருந்த திட்டங்கள்படி முன்னேற்றமடைய அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் சீனுவுக்கு 21 கட்டளைகளை விதித்தார்கள். அவைகளின்படி நடப்பதாகச்சீனு ஒப்புக்கொண்டிருந்தால் அது ஜப்பானிய ஆதிக்கத்தின்கீழ் வந்துவிட நேரிடும். வஞ்சகமாக ஸைபீரியாவை தன் ஆதிக்கத்திற்குக் கொண்டுவர சூழ்ச்சி செய்தது பயனடையாமல் போனது போல், இந்த சூழ்ச்சியும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டது. சிறிதுகாலம் முற்றிலும் அமைதி என்று சொல்ல முடியாமல் போனுலும், கொஞ்ச அமைதியாகத்தான் ஜப்பானியர்கள் இருந்தார்கள். ஆனால் சீனுவில் ஒற்றுமையும், அபிவிருத்தியும் தலைகாட்ட ஆரம்பித்தவுடன் அதைத் தடுக்க டோகியோவில் திட்டங்கள் போடப்பட்டன.

ஜப்பானின் வஞ்சக சூழ்ச்சியால் சீனு மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிக கஷ்டமடைந்திருக்கிறது. டோக்கியோவிலும், நான்கிங்கிலுமிருந்த ஜப்பானிய ராஜ நீதி நிபுணர்களும், தந்திரிகளும் சீனுவுக்குச் சாதகமாக தேனொழுகும் வார்த்தைகளைப் பேசிவரும்பொழுதே, அவர்கள் சகாக்களான ராணுவ உத்தி யோகஸ்தர்களும் கப்பற்படை தலைவர்களும் வஞ்சகமாக பல இடங்களில் தாக்கி வந்தார்கள்.

இரண்டு தேசத்தார்களின் பரஸ்பர சாதகத்திற்காக இருநாடுகளுக்கும் சிநேகபாவமும், ஐக்கிய பத்தியமும் உண்டாக்கவேண்டிய விருப்பத்தை முன்னிட்டு ஜப்பானியக்கொள்கை அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக சீனுவிலிருக்கும் ஜப்பானிய அயல்நாட்டு மந்திரிகளும் தூதர்களும் விஸ்தரித்து வந்தார்கள். ஸ்வதந்திர குடியரசு பிராந்தியத்தில் ஜப்பானியத் தலைவர்கள் நடத்திய நடவடிக் கைகள்யாவும் முரட்டுத்தனமாக இருந்தன. அவர்கள் யாவரையும் அடிமை யாக்கியும் யாவருக்கும் கோபமூட்டியும், பிளவு உண்டாக்கியும் வந்தார்கள்.

இந்த இரட்டை ஆட்சியின் பயனுக ஜப்பானிய அதிகாரிகள் சீனப் பிராந்தங் களில் அடிக்கடி படையெடுத்துவந்து அவர்கள் உரிமைகளைக் கைப்பற்றிக்கொண் டார்கள். ஆனால் அதே சமயத்தில் ஜப்பானிய ராஜ தந்திரிகளே இரண்டு தேசங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் வருத்தங்களைத் தீர்த்துக்கொள்ளுவதற்காகப் பிரயத்தனப்படுவதுபோல் பாசாங்கு செய்து ஒப்பந்தம் பேசிவந்தார்கள்.

## மென்னியை இறுக்கிப்பிடிப்பது.

எப்படியிருந்தாலும் சில சமயங்களில் அவர்கள் உண்மையை மறைக்கப் பிரயத்தனப்படவில்லை. ராணுவ வீரர்களும், அவர்களுடைய ராஜ தந்திரி சகாக் களும் இரண்டு தேச பரஸ்பர நடவடிக்கைகளில் நியாயம், முறை, யோக்கியதை இவற்றுடன் நடந்துகொள்ள அவசியமில்லை என்பதைக் காட்டியிருக்கிறார்கள்.

அவர்களுக்கு என்ன விருப்பமென்பது தெரியும். ஜப்பானியர்கள் தங்க ளுடைய காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டி சீனுவைக் கசக்கிப் பிழிந்து விட தீர்மானித்திருக்கிறார்கள். அயல்நாட்டு உத்தியோக இலாகா ஜப்பானிய ராணுவ சகாக்கள் செய்த நடவடிக்கைகள் குற்றச்செய்கைகள் இல்லையென்றும், சீனு நடந்துகொண்ட விதத்தினுல்தான் அம்மாதிரி ஏற்பட்டனவென்றும், ஜப்பான் அதற்குப் பாத்திரமில்லை யென்றும் வெகு சிரமத்துடன் விவரித்துக் கூறியது.

சுருக்கமாகச் சொன்னுல் திகைப்படைந்த மனிதர்களுக்கு அவர்கள் கருப்பு வர்ணத்தை வெள்ளை அல்லது ஜப்பானிய ராணுவம் தீர்மானிக்கும் வர்ணமோ அதைச் சொல்லி திருப்தி செய்யவேண்டியதாயிற்று.

## 'ஜப்பானின் புதிய திட்டம்.'

## தேச சரித்திரப் பூர்வமாகப் பார்த்தால் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

(மிஸ்ட்டர் V. S. சுவாமிநாதன் M. A. Msc. எழுதியது.)

ஜப்பான் எப்பொழுதும் பிறரிடமிருந்து ஒவ்வொரு விஷயமும் யாசகம் வாங்கியே வந்திருக்கிறது.

மூன்றாவது நூற்றாண்டுக்கும், எட்டாவது நூற்றாண்டுக்கும் நடுவில் சீனாவைப் பார்த்து அதன் சமூக வாழக்கையின் குணாதிசயங்களையும், ஸ்தாபனங்களையும், அதன் விவசாய முறைகளையும், கலைகளையும், கல்வி முறைகளையும், சட்டங்களையும், எழுதும் முறைகளையும், பட்டுப்பூச்சி வளர்ப்பதையும், புத்த மதத்தையும், கன்பூஸியன் (Confucian) கோட்பாட்டையும் ஜப்பான் பின்பற்றி நடந்து வந்திருக்கிறது.

பிற்பட்ட காலங்களில் வெடிமருந்து தயாரிக்கவும், துப்பாக்கி முதலிய ஆயுதங்களை உபயோகிக்கவும் போர்ச்சுகீஸார் ஜப்பானியர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். வர்த்தகத்திலும், கைத்தொழிலிலும், கிரேட் பிரிடனைப் பின்பற்றி ஜப்பான் நடந்தது. இருப்புப் பாதைகள் போடுவதிலும், சுரங்க வேலைகள் செய்வதிலும் அமெரிக்காவைப் பின்பற்றியது. சட்ட திட்டம் அமைப்பது, பட்டு உற்பத்தி செய்யும் முறைகள், விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சி, ராணுவப் பயிற்சி இவைகளில் பிரான்ஸைப் பின்பற்றியது. பிரான்ஸுக்கும், ஜெர்மனிக்கும் யுத்தம் நடந்தபிறகு ராணுவத் துறையில் ஜெர்மனியை ஜப்பான் பின்பற்றியது.

ஜப்பானியக் கப்பற்படையையே ஸ்தாபிக்க உதவி செய்தது, பிரிடிஷ் கப்பற்படை உத்தியோகஸ்தர்களும், இஞ்ஜினியர்களும்தான். கப்பல் கட்டும் வித்தையைக் கற்றுக்கொடுத்தவர்கள் ஸ்காத்லாந்து தேசத்தினரே. முடிவாகக் கல்விப் பயிற்சியிலும், வைத்திய சாஸ்திரத்திலும் ஜெர்மனி நவீனமாக ஏற்படுத்தியிருக்கும் முறைகளை ஜப்பான் அனுசரித்துவருகிறது.

உலகத்தில் கல்வித் திறமை, நாகரீகம், அல்லது முன்னேற்றம் இவைகளில் எந்த கலையிலும் சுயமாக ஜப்பானால் யாதொரு முன்னேற்றமும் காட்டமுடியவில்லை. சரித்திரப் பூர்வமாக எழுதுவதற்கும் ஜப்பானில் யாதொரு அபிவிருத்தியும் இல்லை.

### அதன் எண்ணம்போல் செய்கை.

நிச்சயமாக ஜப்பானின் பெயரும் தேசசரித்திரத்தில் இழிவான நாடுகளுடன் சேர்த்து பிரஸ்தாபிக்கப்படும். சீனாவுடன் ஜப்பான் விரோதப்பான்மையுடன் இல்லை. போர் செய்யப்போவதாக எச்சரிக்கை செய்யவுமில்லை. திடீரென்று 1894-ம் வருஷம் ஜூலை மாதம் 25-ம் தேதியில் சீனத் துருப்புகளை ஏற்றிவந்த கௌஷிங் என்ற கப்பலை நனிவா (Naniwa) என்ற ஜப்பானிய க்ரூயிஸர் இடிகுண்டுகளால் தாக்கிற்று. 1904-ம் வருஷத்தில் ஜப்பான் ருஷ்யா பேரில் போர் தொடங்குவதாக எச்சரிப்பதற்கு முன்னமேயே முரட்டுத்தனமாக ஆர்தர் துறைமுகத்தைத் தாக்கியது.

முந்தி நடந்து கொண்டதைப்போலவே தனக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் விரோதம் ஏற்பட்டுவிட்டதாக உத்தியோக முறையில் வெளிப்படுத்துவதற்கு முன்னமேயே 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் ஜப்பான் துரோக சிந்தனையுடன் ஹாவாய் தீவுகளைத் தாக்கிற்று.

---

## நேசநாட்டின் வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கை.

(இஸ்தான்புல்லிலுள்ள 'யேனிசபா' 26—4—42-ம் தேதி பத்திரிகையில் ஹுஸேயின் காகிட் யால்ஸின் எழுதியது).

நேசநாட்டினருக்குள் வெற்றிகிடைப்பது நிச்சயம் என்ற நம்பிக்கை தோன்றியிருக்கிறது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அதிக உத்சாகத்துடன் இருக்கிறார் என்று

யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து தந்திகள் வந்திருக்கின்றன. அமெரிக்கப் பொது ஸ்தாபனத் தலைவர், ஜெனரல் மார்ஷல் லண்டனில் போய் சந்தித்துவிட்டு பிரிடிஷ் கப்பற் படைத்தலைவர் ஒருவரைக் கூட்டிக்கொண்டு யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு திரும்பி வந்திருப்பது ரூஸ்வெல்டின் உத்சாகத்திற்குக் காரணமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அங்கிருந்து ஜனாதிபதி அதிக ஆவலைக் கொடுக்கக்கூடிய செய்தி ஒன்று தெரிந்துகொண்டிருப்பதாகவும், சந்தர்ப்பம் வாய்க்கும் சமயத்தில் வெளியிடப் போவதாகவும் சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் அதிகாரப் பூர்வமான ஸ்தாபனத்திலிருந்து வந்த செய்தியில் ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தப் போக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எந்த ஆதாரங்களின் பேரிலும், எந்த நிகழ்ச்சிகளை முன்னிட்டும் இந்த மாதிரி அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லமுடியவில்லை. இருந்தபோதிலும் நேசதேசத்தார்களின் ஆதிக்கத்தின்கீழுள்ள பிரதேசங்களில் நேசதேசத்தார் களுக்கு வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை உண்டாயிருக்கிறது.

கொஞ்ச காலத்திற்குமுன் ஆஸ்திரேலியா பேராபத்திற்குட்பட்டதாகத் தோன்றிற்று. அந்நியநாட்டுப் போர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் ஆஸ்திரேலியத் துருப்புகள் தங்கள் நாட்டிற்கே திரும்பிவர அவா கொண்டு இருப்பதாகக் காட்டிக்கொண்டார்கள். ஆஸ்திரேலியா ராஜநீதி நிபுணர்கள் பிரிடனைத் தங்களுக்கு உடனே உதவி கொடுக்கும்படி வேண்டினார்கள். ஆஸ்திரேலியாவில் இம்மாதிரி நிலைமை ஜப்பானியர்களுக்குத் தைரியத்தை உண்டாக்கிவிட்டது. அவர்கள் ஆஸ்திரேலியர்களை ஏமாற்றிவிடலாம் என்று நம்பினார்கள். ஆஸ்திரேலியா உடனே பிரிடனைக் கைவிட்டுவிட்டு, ஜப்பானுடன் சேரவேண்டுமென்று விரோதமான ஏற்பாட்டைக் கோரினார்கள். ஆனால் இப்பொழுது ஆஸ்திரேலியாவிலிருந்து கிடைக்கும் செய்திகளில் பூர்ண நம்பிக்கை யும்கொண்டு, சண்டைக்குத் தயாராகயிருக்கும் ஜனங்களின் நடவடிக்கைகளை விவரமாகக் கண்டிருக்கிறது. அந்நிய நாடுகளிலிருந்த ஆஸ்திரேலியப் படைகளை பிரிடிஷ் கப்பல்கள் மீண்டும் ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டுசென்றிருக்கின்றன. மேலும் பிலிப்பைன்ஸ் சண்டையில் பிரக்யாதி பெற்ற மாக் ஆர்தரை அந்த நாட்டிற்குத் தலைவராக ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மேலும் அமெரிக்கத் துருப்புகளும், பொருள் உதவியும் ஆஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. பெரிய தயாரிப்புகள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஆஸ்திரேலிய விமான நிலயங்களிலிருந்து விமானங்கள் பறந்துசென்று சிறிது நேரம்கூட ஜப்பானியப் படைகளுக்கு ஓய்வு கொடுக்காமல் இடைவிடாமல் தாக்கின. இந்த விவரங்களைப் பார்த்தால் ஆஸ்திரேலியா ஊக்கம் குறைந்த நாடாகத் தோன்றவில்லை.

ஐரோப்பா கண்டத்தில் நடக்கும் சம்பவங்களைக் கவனித்தால் உலக வியவகாரத்திலும், ஆத்ம சக்தியிலும் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதை யாவரும் பார்க்க லாம். பிரிடிஷ் வெடிவிமானங்கள் ஜெர்மன் துறைமுகங்களை வெடிகுண்டுகளால் தாக்கி தவிடு பொடியாக்கிக்கொண்டு வருகின்றன. மேலும் ஜெர்மனியின் உணர்ச்சி குறைந்து மாறுதலடைந்திருப்பதை ஜெர்மனி இனிமேல் மறைத்து வைக்கமுடியாது.

ஐரோப்பா கண்டத்தில் நன்றாய் பயிற்சிபெற்ற பிரிடிஷ் தலைவர்களின் தலைமையின் கீழ் எதிர்பாராதபடி திடீரென்று எதிரிகளின் நாடுகளில் போய் அடிக்கடி தாக்கிவருகிறார்கள். அத்தாக்குதல்கள் ஒருபொழுதும் நிறுத்தப்பட மாட்டாதென்று தெரிகிறது. வேடிக்கையாக எடுத்துக்கொள்வதாகத் தொன்றும் இந்த நடவடிக்கைகள், வருங்காலத்தில் உண்மையான பெரிய படையெடுப்பு ஏற்படுவதற்கு வழிகாட்டியாக இருக்கும்.

ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் ஜெர்மன் அரசாக்ஷிக்கு ஏற்பட்டிருக்கும் விரோதங்கள் அதிகரித்துவருவதிலிருந்து, ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தப் போக்கு உண்டாகியிருப்பது ஊர்ஜிதமாகத் தெரிகிறது. பிணையாளிகளைக் கொலை செய்வது, ஸெர்பியாவில் தளகர்த்தர் மிகைலோவெயிட்டுக்கு ஆதரவு அளிப்பவர் களுக்குச் சிக்ஷை கொடுப்பது, நார்வேயில் சிறைப்பிடிக்கப்பட்ட 1,000க்கணக்

கானபேர்களை வடக்கே கல் உடைக்க அனுப்புவது, இவையெல்லாம் ஜெர்மானியர்கள் ஜெயித்த நாடுகளில் அனுதாபம் ஏற்படும்படி செய்யத் தவறிவிட்டதைக் காட்டுகிறது. அச்சு நாடுகளின் மனோபலம் ஏற்கனவேயே முறிந்துபோய் விட்டது என்பதை ஒருவரும் சந்தேகிக்க இடமிருக்காது. ஒன்றுமறியாத பேதைகளைச் சுட்டுக்கொன்று ஒவ்வொருவருக்கும் அதிருப்தியை அளிக்கக் கூடும்.

அச்சுநாட்டினரின் புதிய திட்டம், மிருக பலத்தினால்தான் நிலைநிறுத்தக் கூடும். ஆனால் ஐரோப்பா முழுவதையும் மிருக பலத்தினால் அடைக்கியாள ஜெர்மனிக்குப் போதுமான திறமையில்லை. எப்பொழுது ஜெர்மன் ராஜ நீதி நிபுணர்கள் உணர்ச்சி உண்டாக்க முடியாமல் தோல்வியடைகிறார்களோ அப்பொழுதே ஜெர்மன் வீரர்களின் வீரத்தனம் எப்படியிருந்தபோதிலும் யுத்தகல்அவர்கள் தோல்வியடைவது நிச்சயம்.

---

## பிரிடன் நடத்திவரும் வெடிகுண்டு விமானத்தாக்குதலும், அதன் தயாரிப்பு பிரச்னைகளும்.

(லண்டனிலிருந்து ஸ்பெஷல் கேபிள் மூலம்).

ஜெர்மனியின்பேரில் பிரிடிஷ் விமானங்கள் வெடிகுண்டுகள் பிரயோகிப்பதைப்பற்றி புதிய செய்திகள் 'அப்ஸெர்வர்' என்ற பத்திரிகையின் விமான நிருபர் எழுதியுள்ளார்.

ஒவ்வொரு இரவும் ஜெர்மனிக்கு 1,000 பாம்பர் விமானங்கள் வீதம் அனுப்பக்கூடுமானால், இவ்வுத்தத்தை சரத்காலத்திற்குள் வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவந்துவிடலாம் என்று பாம்பர் விமானப்படையின் தலைவரான தளகர்த்தர் A. T. ஹாரிஸ் சொன்னார். இவ்விதம் 1,000 பாம்பர் விமானங்களைக்கொண்டு தாக்குதலை ஆரம்பிப்பதற்குச் சரியான ஸ்தாபனம் ஒன்று தேவையாக இருக்கும். ஆனால் சீதோஷ்ண நிலை அனுகூலமாயில்லாததினால், ஒவ்வொரு இரவும் பாம்பர் படைப் பகுதியை அனுப்புவது முடியாத காரியம். அதனால் சராசரியாக ஒவ்வொரு இரவும் 1,000 விமானங்கள் வீதம் தாக்குதலுக்கு அனுப்பவேண்டுமானால் 3,000 விமானங்களோ அல்லது இந்த வருஷத்தைப்போல் சீதோஷ்ண நிலை கெடுதலாகவே இருந்தால், அடிக்கடி இன்னும் உபரியாகவே அனுப்ப வேண்டியிருக்கும்.

### பாம்பர் விமானப்படையினர்.

இவ்வித தாக்குதலுக்கு எவ்வித தயாரிப்பும், பிரயத்தனமும் தேவை என்று கவனிப்போம். ஜெர்மனியின்பேரில் படையெடுப்பதற்காக 3,000 விமானங்களை அனுப்புவதற்கு ஒரு நிலயத்திலிருந்து 2 படைப் பகுதிகள் செல்லக்கூடுமானால், அம்மாதிரி 120 விமான நிலயங்கள் வேண்டியிருக்கின்றன. இதில் ஒன்றும் சிரமமில்லை. லங்காஸ்டர், ஸ்டர்லிங், ஹாலிபாக்ஸ் இவைபோன்ற நான்கு யந்திர விமானங்களில் ஒவ்வொன்றிலும் 7 விமானிகள் செல்லக்கூடும். மேலும் வெல்லிங்டன், ஒயிட்லி போன்ற விமானங்களில் ஒவ்வொன்றிலும் 5 விமானிகள்தான் ஏறிச் செல்லக்கூடும். இவ்விதம் கணக்கிட்டால் 3,000 விமானங்களுக்கு மொத்தத்தில் சராசரி 18,000 விமான ஓட்டிகளும், சிப்பந்திகளும் தேவையாயிருக்கும். தாக்கச் செல்லும் நல்ல கனமான பாம்பர் விமானங்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அந்தந்த விமானத்திலுள்ள ஒவ்வொரு விமானிக்கும் விமான நிலயத்திலிருந்து குறைந்தபக்ஷம் 20 பேர்கள் நேர்முகமாகவோ, மறைவாகவோ உதவி செய்யவேண்டியிருக்கிறது. அதிக விமானங்கள் தாக்கச் செல்லும் சமயங்களில் 3,60,000-த்திலிருந்து 4,00,000 வேலையாட்கள் வரை விமான நிலயங்களில் வேலை செய்யவேண்டியிருக்கிறது. கோடை காலத்தில், இராக்காலம் மிகவும் குறைவு. அப்பொழுது மிகப் பெரிய 3,000 பாம்பர் விமானங்களைக்கொண்டு தாக்குதல் செய்ய, விமான நிலயங்களி

யிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்குள்ள வேலை மிகவும் கடினமானது. குறிப்பிட்ட லக்ஷியங்களை சரியான சமயத்தில் அடையும்படி செய்வதற்காக விமானங்களைப் புறப்படச் செய்வதற்கு காலம் நிர்ணயிப்பது, அதைக்காட்டிலும் மிகவும் சிரமமாக இருக்கும்.

---

## ரீஷ்நௌவின் தஸ்தாவேஜு.

## நாஸித்துருப்புகள் எவ்விதம் நடந்துகொள்ள போதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## ருஷ்ய யுத்தக் கைதிகளை நடத்தும் விதம்.

மாஸ்கோவிற்கு 50 மைல்கள் வடமேற்கேயுள்ள கிளின் நகரத்தை மீண்டும் ருஷ்யர்கள் கைப்பற்றியவுடன், அந்நகரத்தில் ஒரு கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்த ஜெர்மன் அந்தரங்க போலீஸாரின் ரகசிய தஸ்தாவேஜுகளை செஞ்சேனை கைப்பற்றிக்கொண்டது. அவைகளை அப்புறப்படுத்தவோ, அழித்துவிடவோ ஜெர்மானியர்களுக்கு அவகாசமில்லாமல் போய்விட்டது.

அங்கு அகப்பட்ட ஏராளமான தஸ்தாவேஜுகளில் 6-வது ஜெர்மன் சைனியத்திற்குத் தலைவரான தளகர்த்தர் வான் ரீஷ்நௌ கையொப்பமிட்ட உத்தரவும் அகப்பட்டது. அது 1941-ம் வருஷம் அக்டோபர்மீ 10-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டது. அதில் கிழக்குப் போர்முனையில் ஜெர்மன் சைனியம் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்ற பூரா விவரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன.

அந்த உத்தரவுடன் மற்றொரு உத்தரவும் சேர்க்கப்பட்டிருந்தது. அதாவது ஜெர்மன் பின்னணி சைனியம் 102-வது ந. பிராந்தத்தின் தலைவரின் ஆபீஸிலிருந்து பிறப்பிவிக்கப்பட்டது. அந்த உத்தரவைப் பார்க்க வான் ரீஷ்நௌவின் உத்தரவை ஹிட்லர் ஆமோதித்ததாகத் தெரிகிறது.

இனி வரப்போகும் காலத்தில் இதைத்தான் ரீஷ்நௌ தஸ்தாவேஜு என்று இழிவாகச் சொல்லப்படும். அதில் கண்டதாவது:—

"போல்ஷிவிக் முறையில் துருப்புகளின் தன்மையைக் குறித்த பிரச்னை நன்றாகப் புரியவில்லை. போல்ஷிவிக் அரசாங்கத்தின் பேரில் படையெடுத்தற்கு முக்கியமான கருத்து என்னவென்றால் அவ்வரசாங்கத்தை அடியோடு அழித்து ஐரோப்பாவின் கல்வித்துறையில் ஆசியாக்காரர்களின் கலப்பே இல்லாமல் செய்யவேண்டுமென்பதுதான். இந்த முறையில் சாதாரணமாக ராணுவம் செய்யவேண்டிய வேலைகளைக் காட்டிலும் அதிகப்படியான வேலை செய்யவேண்டியிருக்கிறது.

"முதலாவதாக நமது துருப்புகள் சரியானமுறையில் எதிரியை இன்னும் வேட்டையாட முடியவில்லை. வஞ்சகமாகவும், கோரமாகவுமுள்ள கொரில்லாப் படைகளை நமது துருப்புகள் இன்னும் கைதிகளாகப் பிடித்து வருகிறார்கள். அவர்கள் சொல்லும் செய்திகளை நம்புகிறார்கள். தனிப்பட்ட சிறு காலாட்படையைச் சேர்ந்தவர்கள், பிச்சைக்காரர்கள் இவர்கள் ராணுவ உடுப்போ, பொது மக்கள் போடும் உடுப்போ போட்டிருந்தால் அவர்களைப் போர்வீரர்களாகக் கருதி யுத்தக் கைதிகளின் முகாமுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

### பொதுமக்களுக்கும், கைதிகளுக்கும் உணவில்லை.

"சிறை செய்யப்பட்ட ருஷ்ய உத்தியோகஸ்தர்கள், ருஷ்யப் பிரதிநிதிகள் தெருக்களில் தாராளமாக நடந்து சென்று ஜெர்மன் வீரர்களுக்கு உணவு தயாரிக்கப்படும் சமையல் அறைகளிலிருந்து உணவு சாப்பிடுகிறார்கள். இம்மாதிரி அவர்களை விட்டுவைப்பது மிகவும் கேவலமான நிலைமை. இப்பொழுது நடக்கும் போரின் தத்துவத்தை துருப்புகளுக்குத் தலைமை அதிகாரி சொல்லவேண்டும்.

அங்கு வசிக்கும் ஜனங்களுக்கும், யுத்தக் கைதிகளுக்கும் உணவு ஸப்ளை செய்வது அனுவசியமாகக் காட்டும் தயாளத்துவம்.

"தாய் நாட்டில் தங்களுக்குக்கூட வைத்துக்கொள்ளாமல் போர்முனைக்கு வெகுசிரமத்துடன் அனுப்பப்படும் உணவை எதிரிக்கு நமது போர்வீரர்கள் கொடுக்கக்கூடாது. கைப்பற்றும் பொருள்களையும்கூட கொடுக்கக்கூடாது. அவைகள்தான் நமது ஸப்ளைகளின் முக்கியமான பாகம்.

"நமது படைப்பதிகளில் தங்குவதற்காகக் கருதப்படும் கட்டடங்களில் மட்டும் ஏற்படும் தீக்களை அணைக்க நமது துருப்புகள் அக்கரைகொண்டிருக்க வேண்டும். போல்ஷிவிக் அதிகாரத்தைக் காட்டுவதற்கு அறிகுறியாயுள்ள மற்ற இடங்களையும், கட்டடங்களையும் அழித்து விடவேண்டும். கிழக்குப் பிரதேசத் திலுள்ள சரித்திரப் பிரசித்திபெற்றவைகளோ, சித்திரக்கலையோ நமக்குக் கொஞ்சமும் பொருட்டில்லை.

"விளைபொருள்களையும், ராணுவத்திற்கு அவசியமாயுள்ள தொழிற்சாலையை யும் பாதுகாப்பதற்காக இந்த உத்தரவில் விசேஷமான முறைகள் சொல்லப் பட்டிருக்கின்றன.

"போர் செய்யும் படைப்பகுதிகளுக்குப் பின்னுலிருக்கும் ஜனங்களை முற்றிலும் நிராயுதபாணிகளாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் போனுல் போர்படைகளுக்கு ஸப்ளைகள் வருவதை அவர்கள் தடுக்கக்கூடு மென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். முடிந்த இடங்களில் கைப்பற்றின பீரங்கிகளையும், வெடிமருந்தையும் மறைத்தோ, பாதுகாத்தோ வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

"போரின் நிலைமை இதற்கு அனுசரணையாக இல்லாமல் போனுல் பீரங்கி களையும், வெடிமருந்தையும் பிரயோஜன மற்றதாகச் செய்யவேண்டும். போரணி களுக்குப் பின்னுல் தனிப்பட்ட கொரில்லாப் படைகள், பீரங்கிகளை உபயோ கித்தால் அதற்குத் தகுந்தபடி திண்ணமாகவும் கொடூரமான நடவடிக்கைகளை யும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

## புருஷர்களை அழித்து விடுவது.

"கொரில்லாப்படைகளுடன் சேராமல் தடை செய்வதற்காக இம்முறை களை புருஷர்களின் எண்ணிக்கையைக் குறைக்க உபயோகிக்கவேண்டும். ருஷ்யர் களுக்கு எதிராகவுள்ளவர்களில் எந்தப்பக்கம் சேரலாமென்று தயங்கி இருப்ப வர்களுக்கு விஷயங்களை விவரித்துச்சொல்லி ருஷ்யர்களுக்கு எதிராக நடக்கும் போரில் கலந்து கொள்ளும்படி செய்யவேண்டும்.

"இம்மாதிரி செய்ய இஷ்டப்படாததினுல் அவர்கள் ருஷ்யர்கள் பேரில் அனுதாபம் உள்ளவர்களென்று நடத்தப்பட்டால் அதற்காகப் புகார் செய்யக் கூடாது. பாக்கியுள்ள போல்ஷிவிக் விஷமிகளின் பயமுறுத்தல்களைக்காட்டிலும் ஜெர்மானியர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளின் பயம் அதிகமாக இருக்கும்படி செய்யவேண்டும்.

"வருங்காலத்தில் ராஜீய பயன்களைப்பற்றி கவனியாமல் படைவீரர்கள் இருவித வேலையைச் செய்து முடிக்கவேண்டும். போல்ஷிவிக் கோட்பாடு, ஸோவியத் அரசாங்கம், அதன் ஆயுதப்படைகள் இவைகளை முற்றிலும் அழிக்க வேண்டும். கபடமாகவும், கொடூரமாகவுமுள்ள எதிரியைக் கொஞ்சமும் இரக்கமன்னியில் அழித்து, ருஷ்யாவில் இருக்கும் ஜெர்மன் படைப் பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

"இம்மாதிரி செய்தால்தான் ஆசியாவில் யூதர்கள் பயத்திலிருந்து நிரந்தர மாக ஜெர்மானியர்களை விடுவிக்கவேண்டி எடுத்துக்கொண்டிருக்கும் வேலையைச் செய்து முடிக்க முடியும்."

# ருஷ்யாவில் கொரில்லாச் சண்டை.
# ஜெர்மானியரின் முன்னேற்றம் எப்படித் தடைப்பட்டது.

(பிலிப்ஸ் ஜோர்டன் எழுதியது.)

(1942-ம் வருஷம் மே மாதம் 1-ம் தேதி ஆல் இந்தியா ரேடியோ டெல்கி நிலயத்திலிருந்து லண்டன் நியூஸ் கிரானிகள் பத்திரிகையைச் சேர்ந்த பிலிப்ஸ் ஜோர்டன் கொரில்லா யுத்த முறையைப்பற்றி ஒலிபரப்பியதின் விவரம் கீழே காட்டப்பட்டிருக்கிறது).

நவீன யுத்தம் முற்றிலும் சிப்பாய்களால் மட்டில் செய்யக்கூடிய யுத்தமல்ல. முற்றிலும் பழைய யுத்தக்கொள்கைகளை கையாண்டு வருபவர்கள்கூட இது விஷயத்தை இன்னும் தெரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நவீன யுத்த முறையில் போர் பயத்திற்குட்பட்ட பிரதேசங்களிலிருக்கும் பொதுமக்களை யும் பொருத்திருக்கிறது.

நேசதேசத்தார்களில் ஒன்முகிய ருஷ்ய ராணுவ ஸ்தாபனம் நவீன யுத்த முறையைக் கையாண்டு, அதனால் நடமுறையில் பல சாதகங்களை அடைந்திருக் கிறது. அதனால் நவீன யுத்தம் எல்லோரையும் பொருத்தது என்று அதற்குத் தெரியுமாதலால் ருஷ்யாவில் ஒரு பெரிய கொரில்லாப் படையைத் ('Partisans' திரட்டி அவர்களுக்குத் தைரியமூட்டி, பயிர்ச்சியும் கொடுத்திருக்கிறது.

இந்த யுத்தத்தில் நடந்த சம்பவங்களில் கொரில்லாப் படையினால் மட்டில் எதிரியைத் தோற்கடிக்க முடியாது. ஆனால் அவர்களுடைய வேலைத் திறமையும், தைரியமும் சேர்ந்து தங்கள் தேசத்தைப் பிடிப்பதற்கான ஜெர்மன் முயற்சி களைப் பாழ்செய்துவருகின்றன. ஸோவியத் ஐக்கிய நாட்டில் ருஷ்ய-ஜெர்மன் யுத்தம் ஆரம்பமான முதல் ஏழு மாதங்கள் வரை நான் அங்கு இருந்திருக்கிறேன். ருஷ்யாவில் யுத்த முயற்சியைப்பற்றி மாஸ்கோவிற்கு அனுப்பப்பட்டிருக்கும் தூது கோஷ்டியைச் சேர்ந்த எந்த நபரும் தெரிந்துகொண்டிருப்பதைக் காட்டி லும் அதிகம் தெரிந்துகொள்ள எனக்கு சந்தர்ப்பங்கள் இருந்தன.

இந்த கொரில்லாப் படைகளைப்பற்றி சில விஷயங்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். அவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்றும், யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் என்ன பயிற்சி கொடுக்கப்பட்ட தென்றும் எனக்குத் தெரியாது. மேலும் ஜெர்மன் யுத்த திட்டங்கள் அவர்களினால் எவ்விதம் பாதிக்கப்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது.

ஆனால் அவர்கள் நடவடிக்கையினால் ஒரு முக்கிய பயன் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியும். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் ஜெர்மானியர்கள் ருஷ்யர் களைத் தாக்கினால், ருஷ்யர்கள் அவர்களைத் திரும்பித் தாக்குவதற்குமுன் செம் படை கொஞ்ச தூரம் பின்வாங்கத்தான் வேண்டுமென்று ருஷ்ய ராணுவ ஸ்தா பனத்திற்கு நன்றாய்த் தெரியும்.

அப்பொழுது ஜெர்மானியர்கள் முதலில் தாக்குவார்கள் என்று பயமடைந் திருந்த கிராமங்களிலும், சிறுபட்டணங்களிலும், அவர்கள் போய் கொரில்லாப் படைகளைத் திரட்டினார்கள். ஒவ்வொரு படைக்கும் கிராமத் தலைவனையோ அல்லது அங்குள்ள ஒரு பிரபல கக்ஷித் தலைவனையோ அதிகாரம் வகிக்கும்படி செய்வார்கள். இன்னும் சில இடங்களில் காடு வனாந்திரங்களில் ஏராளமான உணவுப் பொருள்களையும் ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் புதைத்து வைத்தார்கள். "எதிரி வந்தால் அவன் அமைதியாக இருக்க முடியாமல் அவன் வாழ்க்கைக்கு வேண்டிய இடைஞ்சலைச் செய்யுங்கள். எங்களுக்கு அவ்வப்போது நடக்கும் விஷயங்களைத் தெரியக் கொடுங்கள்" என்று சொன்னார்கள்.

பிற்பட்டு ஜெர்மானியர்கள் உடனே படையெடுத்து வந்துவிட்டனர். கொரில்லாப் படைகள் காடுகளுக்குள் ஓடிவிட்டார்கள். சிலர் குன்றுகளை அடைந் தனர். அங்கிருந்துகொண்டு ஜெர்மானியருக்கு வேண்டிய ஹிம்ஸையும், இடையூறு களையும் செய்தார்கள். எதிரிகளுடன் அவர்கள் நேருக்கு நேர் நின்று போர் செய்ய முடியவில்லை. ஆனால் இராக் காலங்களில் அவர்கள் ஒளிந்துகொண் டிருக்கும் இடங்களிலிருந்து வெளிவந்து ஜெர்மன் டாங்கிகளை நிறுத்தி வைத் திருக்கும் இடங்களையும், சைனியங்கள் தங்கியிருக்கும் பிரதானமான முகாம்களை

யும் தாக்கினார்கள். இதைக் காட்டிலும் ஜெர்மன் போக்குவரத்துகளுக்கு அநேக இடையூறுகளை விளைவித்தார்கள். அடிக்கடி ஜெர்மானியர்களுக்கு ஸப்ளைகள் கொண்டுவரும் ரயில்களை கவிழ்க்கவும அவர்களால் முடிந்தது.

இரவில் மட்டில் இவ்விதம் அவர்கள் செய்வதோடு நிற்பதில்லை. பகல் நேரங்களிலும், புதர்களிலும் மறைவிடங்களிலும் இருந்துகொண்டு, துப்பாக்கிகளைக் கொண்டு எதிரிகளுடன் சண்டை செய்வார்கள். அநேகமாகத் துப்பாக்கிகள் கிடைக்காத சமயங்களில் அரிவாள், கத்தி அல்லது மனிதனைக் கொல்லக்கூடிய வேறு எந்த ஆயுதத்தைக் கொண்டாவது சண்டை செய்வார்கள்.

பெரும்பாலாகச் சொல்லுமிடத்து ராஜபாட்டைகளைத் தவிர வேறு வழிகள் மூலம் ஸப்ளைகளைக் கொண்டு வரமுடியாதபடி ஜெர்மானியர்களைத் தடுத்து விட்டார்கள். அதனால் செஞ் சைனியத்தைச் சேர்ந்த விமானப்படை ஜெர்மன் ஸப்ளைப் போக்குவரத்தை இடைவிடாமல் தாக்கி அழித்து விடமுடிநதது. அதுமாதிரி ருஷ்யர்களுக்கு வரும் ஸப்ளை மார்க்கஙகளை எதிரிகள் அவ்வளவு வெற்றிகரமாகத் தாக்க முடியவில்லை. இன்னும் அவைகள் அதிகம் செய்தன. போக்குவரத்துக்கு ஜெர்மானியர்கள் ஏற்படுத்தியிருந்த பாதுகாப்பை அதிகப் படுத்துமபடி வேண்டியதாயிற்று. இதற்காக ஒரு சமயம் மூன்று படைப் பகுதிகள் உபரியகா உபயோகப் படுத்தப்பட்டிருக்கலாம். அந்தப் பாதுகாப்புப் படைகள் மாஸ்கோவைப் பிடிக்க ஜெர்மானியர்கள் செய்யும் யுத்தத்தில் முன்னணியில் நின்று போர் செய்வதற்கு தகுந்தவாறு நன்றாக பயிற்சியளிக்கப்பட்ட படைப் பகுதிகள். இப்படைப் பகுதிகள் மாஸ்கோவைப் பிடிப்பதற்கு ஜெர்மானியருக்கு உபயோகப்பட்டிருப்பார்கள். ஆனால் கொரில்லாப் படையினால் இப்பகுதிகளை அவ்விதம் உபயோகிக்க முடியவில்லை.

ஆதலால் ருஷ்யர்களுக்கு எதிரே அதிகப்படைப்பகுதிகள் நின்று சண்டை செய்ய முடியாமல் இந்த கொரில்லாப் படை செய்யமுடிந்தது. இது மாத்திரமல்ல எந்த சமயத்திலும் உனக்குத் தெரியாமல் திடீரென்று உன் முதுகில் கத்தியைச் சொருகக் கூடியதாக இருந்தால் அந்த இடத்தில் வசிப்பது மிகவும் ஆபத்தல்லவா? அம்மாதிரி ருஷ்யாவிற்கு அனுப்பப்பட்ட ஒவ்வொரு ஜெர்மன் போர் வீரனும் இந்த நிலைமையில்தான் உயிர் வாழவேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட ருஷ்யாவில் ஜெர்மன் போர்வீரன் தூங்குவதற்காகக் கீழே படுத்துக்கொண்டால் அவன் உயிருடன திரும்ப எழுந்திருப்பானோ என்பது அவனுக்கே நிச்சயமில்லை. இரவில் தேசாபிமானம் கொண்ட ஸ்திரீ, புருஷர்கள், ஏன் ருஷ்யச் சிறுவர், சிறுமிகள்கூட இருட்டில் திடீரென்று தோன்றி ஜெர்மானியன் படுத்துக்கொண்டிருக்கும் இடத்தை வெடி குண்டுகளால் அழித்து விடலாம். அவன் தப்ப முயன்றால் கத்தியினால் குத்தலாம்; அல்லது துப்பாக்கியினால் சுடலாம்.

ஆனால் இந்தச் செய்தியை கேட்பவர்களுக்கு அருவெறுப்பை உண்டாக்க கூடியதாக இருக்கும். இந்த யுத்தத்தில் இதைவிட கேட்க சகிக்க முடியாத அநேக செய்கைகளைப்பற்றி கேள்விபபடுகிறோம். ஆனால் ருஷ்ய கொரில்லாப் படைகள் செய்வது அருவெறுப்பானது என்று எனக்குத் தோன்றவில்லை. ருஷ்யாவிலிருக்கும் ஜெர்மன் கைதிகளிடம் நான் பேசியிருக்கிறேன். இந்த கொரில்லாப் படைகளிடமிருந்து அவர்கள் தப்பினதில் அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டது என்பதை அவாகள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஜெர்மன் சைனியங்களுக்கு நேர்ந்திருப்பதை நினைக்க வருத்தப்படாமலிருப்பது பெருங் கஷ்டமதான்.

கொரில்லாப்படை இன்னும் உபயோகமான வேலையைச் செய்யவும் முடியும். அவர்கள் செய்தும் வருகிறார்கள். அவர்கள் ஒரு சைனியத்திற்குக் காதும் கண்ணும் போல அவ்வளவு முக்கியமானவர்கள். எதிரிகள் வசிக்குமிடங்களில் அவர்களும் வசிக்கிறார்கள். அந்த வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு பாதையையும், ஒவ்வொரு மரமும் அவர்களுக்குத் தெரியும். ஆதலால், எதிரிகளின் நடவடிக்கையைத் துப்பறிவதும், அவர்கள தங்கள் சைனியத்துடன் பேசிக்கொள்வதை ஒட்டுக் கேட்பதும், அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதையும் எஙகு போகப் போகிறார்கள் என்பதையும், ஒவ்வொரு இடத்திலும் அவர்களுக்கு எத்தகைய பலம் இருக்கிறதென்பதையும், இன்னும் அநேக விஷயங்களையும் தெரிந்து கொள்ளுவது அவர்களுக்கு மிகவும் சுலபம்.

இந்தச் செய்தியுடன் இன்னும் எதிரி படைப் பகுதிகளின் முகாம்களிலிருந்து தேசப் படங்களையும், தஸ்தாவேஜுகளையும் கொரில்லாப் படைகள் கைபற்றி செம்படை முகாம்களுக்கு தைரியமாகவும், ரகசியமாகவும் கொண்டுபோய் கொடுக்கின்றன. சில கொரில்லாக்களிடம் கையில்கொண்டு போகும் சிறு ரேடியோக்களும் இருக்கின்றன. ரேடியோ மூலமாகவும் சொல்லலாம். இருந்தாலும் அவர்களுக்கு நேரில் போய் சொல்வதில்தான் திருப்தி. இந்த விஷயங்களுக்குத்தான் பையன்களும், பெண்களும் மிக்க உபயோகம். இருட்டில் போரணிகளுக்கு இடையிலே நுழைந்து சென்று செய்திகளையும், பொருள்களையும் கொடுத்துவிட்டு, அவர்களிடம் புதிய யோசனையைக் கேட்டுக்கொண்டும், கைநிறையவோ அல்லது பைநிறையவோ வெடி மருந்துகளுடன் திரும்பி வருகிறார்கள். கேட்பதற்கு இவ்வளவு விஷயங்கள் மிகவும் கஷ்டமாகத் தோன்றினாலும் நடைமுறையில் அவ்வளவு கஷ்டமாக இருக்காது. ஏனென்றால் ருஷ்யப் போர்முனை ஆர்க்டிக் சமுத்திரத்திலிருந்து கருங்கடல் வரை தொடர்ந்து ஓர் அணியாக வகுக்கப்படவில்லை. அது சிற்சிறுவரிசைகளாக இடையிடையே நாட்டுப்புறங்கள் சேர்ந்து அநேக வரிசைகளிருக்கின்றன. அது காரணத்தால் வெறுப்பும், கொடூர ஆட்சியும் கொண்ட ஜெர்மன் பக்கத்திலிருந்து ஸ்வந்திரத்திற்காக ஆண், பெண் இருபாலர்களும் சேர்ந்து போர் நடத்தும் ருஷ்யர்களிடம் போய்ச் சேர மிகவும் சுலபமாக இருக்கிறது.

சீக்கிரத்தில் ஏதாவது செய்தி கொண்டுபோய் கொடுக்கவேண்டியிருந்தால் இரவில் கூட ஜெர்மன் காவலாளிகள் இருக்குமிடத்திலேயே தைரியமாக கொரில்லாப் படைகள் போய் விடுவார்கள். அவர்கள் போரிட்டு வரும் இடம் பூராவும் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

ருஷ்ய கொரில்லா யுத்த கோட்பாட்டில் முதலாவது ஐட்டம் அவர்கள் சொந்த இடத்திலிருந்து கொண்டே சண்டைசெய்ய வேண்டுமென்பதுதான் சம்பளத்திற்காக போரில் சேர்ந்த வீரர்கள்போல் இங்குமங்கும் அவர்கள் போவது கிடையாது. தங்களிடத்தில் தங்கியிருந்தே அவர்கள் சண்டை செய்வதால்தான் அவர்களுடைய சண்டைக்கு பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் அநேகம் பேர்கள் குடியானவர்கள். ஆயுள் பூராவும் அந்த இடத்திலேயே வசித்தவர்கள். ஆதலால் சுற்றுப் புறமெல்லாம் ஒரு இடம் விடாமல் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஜெர்மானியருக்கோ அவ்விதம் தெரியாது. இதனால்தான் அவர்களைப் பிடிக்க ஜெர்மானியருக்குப் பெருத்த இடையூராக இருக்கிறது.

அடிக்கடி தன்பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு ருஷ்யப் போர் வீரன் தனிப்பட்டு வர நேர்ந்தால், அந்தப் பகுதியில் மீண்டும் கொண்டுசேர்ப்பதற்கு அவனுக்கு கொரில்லாப் படைகள் உதவி செய்கின்றன. சில சமயங்களில் அவனைத் தங்கள் தலைவனாகவும் வைத்துக்கொள்ளுகிறார்கள்.

ஆனால் கொரில்லாப் படைகள் எதிரிகளுக்கு அதிக பீதியை உண்டாக்குகின்றன. அவர்களைக் கண்டாலேயே ஜெர்மானியருக்கு அதிக பயம் உண்டாகிறது. கொரில்லாப் படைகள் ஜெர்மானியர் பேரில் திடீரென்று எப்பொழுது பாய்ந்து தாக்கி அடியோடு அழித்து விடுவார்களோ என்று அதிக பயமடைந்திருக்கிறார்கள். இந்த கொரில்லாப் படையைச் சேர்ந்தவர்கள் பெருந் தேசாபிமானிகள். அவர்கள் நாடு ஸ்வதந்திர நாடாக இருக்கவேண்டுமென்பதுதான் அவர்கள் எண்ணம். ஆனால் அவர்களுக்குப் பயிற்சி உண்டோ இல்லையோ அவர்கள் அதற்காக சண்டை செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

இதெல்லாம் வேடிக்கையாகச் சொன்னதல்ல. நான் இதை ஒரு காரணத்தை முன்னிட்டுச் சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே பாஸிஸ்டு கக்ஷியினருடன் குடியரசு நாடுகளைச் சேர்ந்த சைனியங்கள் சண்டையிடும்பொழுது நான் ருஷ்யாவிலும், ஸ்பெயினிலும் கொரில்லாப் படைகளைப் பார்த்திருக்கிறேன். அம்மாதிரி பாஸிஸ்டு கக்ஷியினருடன்தான் இப்பொழுது நாமும் சண்டை செய்ய வேண்டியிருக்கிறது.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

## பிரஸங்கம் 100—(2-வது பிரிவு).

| 1942— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜூன் | ...20, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 21, | ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் ... | ,, | 6.00 |
| | | | குடுமியாமலை ... | ,, | 6.30 |
| | 22, | திங்கட்கிழமை ... | நல்லூர் ... | ,, | 6.00 |
| | | | மண்டையூர் ... | ,, | 6.30 |
| | 23, | செவ்வாய்க்கிழமை. | நச்சாந்துபட்டி ... | ,, | 6.00 |
| | | | விராச்சிலை ... | ,, | 6.30 |
| | 24, | புதன்கிழமை ... | வெங்களூர் ... | ,, | 6.00 |
| | | | கோனாபட்டு ... | ,, | 6.30 |
| | 25, | வியாழக்கிழமை ... | பனையப்பட்டி ... | ,, | 6.00 |
| | | | ராங்கியம் ... | ,, | 6.30 |
| | 26, | வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் ... | ,, | 6.00 |
| | | | விராலிமலை ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 101—(3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 27, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | ,, | 6.30 |
| | 28, | ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி ... | ,, | 6.00 |
| | | | கோட்டைக்காடு ... | ,, | 6.30 |
| | 29, | திங்கட்கிழமை ... | அன்னவாசல ... | ,, | 6.00 |
| | | | கீழக்குறிச்சி ... | ,, | 6.30 |
| | 30, | செவ்வாய்க்கிழமை | ராமச்சந்திரபுரம் ... | ,, | 6.00 |
| | | | ராயவரம் ... | ,, | 6.30 |
| ஜூலை | ... 1, | புதன்கிழமை ... | மழையூர் ... | ,, | 6 00 |
| | | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 2, | வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | | ஏம்பல் ... | ,, | 6.30 |
| | 3, | வெள்ளிக்கிழமை... | குழிபிரை ... | ,, | 6.00 |
| | | | செவலூர் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—22-6-42.